Registered as a news paper.

20 MAY 2004

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
•விரைவானது •பாதுகாப்பானது •நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
☞ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத்தேவையில்லை
☞ வங்கிக் கணக்கு அவ்சியமில்லை
☞ நீடிக்கப்பட்ட சேவை நேரம்
☞ 365 நாள் சேவை
☞ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM. NET
T.P: 021-222 7310
021-222 7555
021-222 7560
Fax: 021-222 7310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 29 (20.05.2004) வியாழக்கிழமை இதழ்:231

### அரசாங்க சமாதானச் செயலகத்தின்

## நடவடிக்கைப் பணிப்பாளராக பிரிகேடியர் சனத் கருணாரட்ன

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான சமாதான முயற்சிகளைக் கையாளும் அரசாங்க சமாதானச் செயலகத்தின் நடவடிக்கைப் பணிப்பாளராக இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் சனத் கருணாரட்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று இந்த நியமனத்தை அறிவித்தார். புலிகளுடனான சமாதான முயற்சிகளைக் கையாளும் சமாதானச் செயலகத்தின் பணிப்பாராக நியமிக்கப்பட்டிருக்கும் பிரிகேடியர் சனத் கருணாரட்ன- யாழ்ப்பாணத்தில் 512 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக இருந்து அண்மையிலேயே கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

2000 ஆம் ஆண்டு ஜுன் 23 ஆம் திகதி முதல் 2003 ஜனவரி 15 ஆம் திகதி வரை இராணுவப் பேச்சாளராகப் பதவி வகித்த பிரிகேடியர் சனத் கருணாரட்ன - சந்திரிகாவின் நேரடிக் கண்காணிப்பிலுள்ள அரசாங்க சமாதானச் செயலகத்தின் நடவடிக்கைப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருப்பது முக்கியம் வாய்ந்ததென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## ஜான் பீற்றர்சன் ஜப்பான் பயணம்

(கொழும்பு)

இலங்கையில் சமாதான நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொறிகோ கவாகுச்சியுடன் பேச்சுக்களை நடத்துவதற்காக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் ரோக்கியோ சென்றுள்ளார்.

நேற்று ரோக்கியோ சென்ற நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் இன்று ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொறிகோ கவாகுச்சியுடன் பேச்சுக்களை நடத்துவார்.

இந்தச் சந்திப்பு முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (01)

## கந்தப்பொல வன்முறையைக் கண்டித்து எம்.பிக்கள் கறுப்புப் பட்டிப் போராட்டம்!



(கொழும்பு)

கந்தப் பொலவில் தமிழ் இளைஞர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தீர்வு யோசனைப்படியே பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படும்!

## கொழும்பில் யசுஷி அகாஷி தெரிவிப்பு

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார வரைபை அடிப்படையாகக் கொண்டே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுமென ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி தெரிவித்தார்.**

நேற்று கொழும்பில் ஊடகவியலாளர் மத்தியில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்த

தலைப் புலிகளும் திறந்த மனத்துடன் பேச்சில் கலந்துகொள்ளவேண்டும்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை உருவாக்கப்படவேண்டியதன்

கடைப்பிடிப்பதில, இருதரப்பினிடையேயும் சிறந்த இணக்கப்பாடு ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரம்

## குற்றத்தடுப்பு பொலிஸார் ஒருவர் மட்டக்களப்பில் சுட்டுக் கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அருகில் உள்ள உபதபாலகத்தில் வைத்து நாசகார குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸார் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் அது பலனளிக்கவில்லையென வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இவரின் தலையில் இரு துப்பாக்கிச் சூடுகள் காணப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள்

வரைபை அடிப்படையாகக் கொண்டே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுமென ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் ஊடகவிய லாளர் மத்தியில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

நாம் திறந்த மனதுடன் பேச்சுக்களில் கலந்துகொள்ளத் தயாராக உள்ளோம். இப்பேச்சில் கலந்துகொள்ளும் அரச தரப்பினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் திறந்த மனத்துடன் பேச்சில் கலந்துகொள்ளவேண்டும்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை உருவாக்கப்படவேண்டியதன் அவசியத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கனவே வலியுறுத்திவந்துள்ளனர்.

தற்போது நடைமுறையில் இருக்கும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை கடைப்பிடிப்பதில, இருதரப்பினிடையேயும் சிறந்த இணக்கப்பாடு ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரம் குறித்து விரிவாக ஆராய்ந்த பின்னரே அரசு பொது இணக்கப்பாட்டுக்கு வருதல் வேண்டும்.

ஜப்பான் முன்னர் குறிப்பிட்டபடி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதமர் ராஜபக்ஷவுடன் அகாஷி சந்திப்பு!



(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகள் மற்றும் அபிவிருத்திக்கான நிதியுதவிகள் குறித்து ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி நேற்றுக்காலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது - சமாதான முயற்சிகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

வடக்கு - கிழக்குப் பகுதிக்கு நிதியுதவிகளை வழங்கும அதேவேளை, தென்பகுதி அபிவிருத்தி குறித்தும் கவனம் செலுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தச் சந்திப்பின்போது தூதுவர் யசூஷி அகாஷியிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்தச் சந்திப்பை அடுத்து கருத்துத் தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ - சமாதான செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை குறித்து ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி மகிழ்ச்சி வெளியிட்டதாகத் தெரிவித்தார்.

அத்துடன், வீதி மற்றும் மின் கட்டமைப்பு, புனரமைப்புத் தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஜப்பானிய அரசாங்கம் உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகத் தமக்கு அகாஷி உறுதியளித்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அருகில் உள்ள உபதபாலகத்தில் வைத்து நாசகார குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸார் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றது.

போதனா வைத்தியசாலை உபதபாலகத்தில் முத்திரை வாங்கிக் கொண்டிருந்த வேளையில், நாசகார குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த தசநாயக்க என்ற பொலிஸாரே கைத் துப்பாக்கியால் சுடப்பட்டார்.

பலத்த காயமடைந்த இவர், உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் அது பலனளிக்கவில்லையென வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இவரின் தலையில் இரு துப்பாக்கிச் சூடுகள் காணப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தையடுத்து சிறைச்சாலையிலிருந்து வைத்தியசாலை வரையான வீதி மூடப்பட்டு தேடுதல்கள் நடத்தப்பட்டன.

மட்டக்களப்பு சிறைச்சாலைக் கட்டடத்தில் நாசகார குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு இயங்கிவருகிறது. சிறைச்சாலைக்கருகிலேயே வைத்தியசாலையும் உள்ளது. (01)

# மட்டக்களப்புச் சம்பவத்துக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை!

## மட்டு - அம்பாறை அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அருகில் கிளர்ச்சித் தடுப்பு பிரிவைச் சேர்ந்த பொலிஸார் ஒருவர் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டதற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லையென விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுக்கும், அரச படையினருக்கும் இடையிலான நல்லுறவினைக் குழப்புவற்காக சில தீய சக்திகள் திட்டமிட்டு இவ்வாறான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுக்கும் - படையினருக்கும் இடையில் அண்மையில் நடந்த சந்திப்பில் இருபகுதியினரும் புரிந்துணர்வுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தினை மதித்து நடப்பதாக இணங்கியிருந்தனர். இதன்படி விடுதலைப்புலிகள் அவ்வாறே நடந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

(சி/2489)

## நெடுந்தீவு - குறிகட்டுவான்

# பயணிகள் கடற்போக்குவரத்தை சீர்செய்ய நடவடிக்கை எடுங்கள்!

## அரச அதிபருக்கு கடிதம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு - குறிகட்டுவான் கடற்போக்குவரத்தை சீர்செய்வதற்கு, நடவடிக்கை எடுக்குமாறு, அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம், அரச அதிபர் செ.பத்மநாதனுக்கு அனுப்பிவைத்த கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஆழ்கடலில் பயணம் செய்யும் நெடுந்தீவு மக்கள் இன்று பயணம் செய்ய படகின்றி அவதிப்படுகின்றார்கள்.

நெடுந்தீவு மக்களின் கடற்போக்குவரத்துக்கு, பொறுப்பாக இருப்பவர்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபை இவர்களது பொறுப்பில் 'குமுதினிப்' படகு சேவையில் ஈடுபட்டு வந்தது. இப்படகு திருத்தவேலைகளுக்காக ஊர்காவற்றுறைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. எட்டு மாதங்களாகியும், இன்னும் குமுதினிப் படகு திருத்தவேலைகளை முடித்துக்கொண்டு வந்துசேரவில்லை. இதனால், நெடுந்தீவு மக்கள் கடற்போக்குவரத்தில் ஈடுபடமுடியாமல் இருக்கின்றனர். அனைத்து அத்தியாவசிய சேவைகளையும் யாழ்ப்பாணம் வந்து மேற்கொள்ளவேண்டியுள்ளது. ஆனால், இன்று எதனையும் மேற்கொள்ளமுடியாமல் தவிப்பதை காணமுடிகின்றது. இது தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்டுள்ளோம். குமுதினியின் வெற்றிடத்தை இதுவரை நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நிறைவேற்றிவந்தது. ஆனால், அதுகூட பழுதடைந்து திருத்தவேலைக்கு விடப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மக்கள் நாளாந்தம் மாவலி துறைமுகம் வந்து, போக்குவரத்து செய்யமுடியாமல் திரும்புவதை அவதானிக்கமுடிகிறது.

பாதுகாப்பற்ற நிலையில் ஓரிரு மீன்பிடிப்படகுகள் பயணிகளை ஏற்றிவருவதையும் காணமுடிகின்றது. இவர்களது உயிருக்கு உத்தரவாதம் இல்லை இச்சூழ்நிலை மோசமான விளைவுகளை ஏற்படுத்தும், எனவே இது குறித்து பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு, கோருகின்றோம்.

இதேவேளை, குமுதினிப் படகு 25 வருடத்திற்கு மேல் பழமையானது. இது எதிர்காலத்தில் கைவிடப்படவேண்டிய ஒன்றாகும். ஆதலால், நெடுந்தீவு குறிகட்டுவான் கடற்போக்குவரத்திற்கு, புதிய படகுத் தேவை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். நெடுந்தீவு மக்கள் இன்று பயணம் செய்யவும், அத்தியாவசிய உணவுப்பொருட்களை எடுத்துச் செல்லவும், அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றவும், முடியாதநிலை தற்போது, ஏற்பட்டுள்ளது என, அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நெல்லண்டை அம்மனின் பொங்கல் திருக்குளிர்ச்சி

(வடமராட்சி)

தும்பளை நெல்லண்டை பத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் - திருக்குளிர்ச்சி நாளை முதல் நடைபெறும்.

அன்று பகல் விஷேட அபிஷேகங்கள் நடைபெற்று, அதன் பின் பூசைகள் இடம்பெறும். அன்றைய தினம் நேர்த்திக்கடன்களை அடியார்கள் நிறைவேற்றுவார்கள். அடுத்த நாள் காலை ஆடுகள் கோழிகள் ஏலத்தில் விற்கப்படும். (17)

# சிசுவைக் கைவிட்டுத் தப்பிய சிறுமிக்கு நீதிமன்றம் பிணை!

யாழ்.போதனா வைத்தியசாலையின் கழிப்பறையில் சிசுவைப் பிரசவித்துவிட்டு, கைவிட்டுச் சென்ற சிறுமியை பிணையில் செல்வதற்கு யாழ். நீதிமன்றம் அனுமதித்தது.

மேற்படி சிறுமி மீது பிள்ளையைப் பெற்று மறைத்ததாகவும், உடலை ரகசியமாக வெளியகற்றப் பார்த்தார் எனவும், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதனை விசாரணைக்கு நீதிபதி எடுத்துக் கொண்டபோது, தான் குற்றவாளியில்லை என சிறுமி தெரிவித்தார்.

இதனையடுத்து மேற்படி சிறுமி கிராம சேவகரின் கடிதத்துடன் இரண்டு நபர்களின் ஆட்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இந்த வழக்கு எதிர்வரும், ஜூன் மாதம் 16 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



யாழ். மத்தியகல்லூரி தமிழ்நூல் வெளியீட்டுப் பிரிவினரால், நாக தமிழிந்திரனின் 'திருவடி சூட்டுப்படலம் வினாவிடை தொகுப்பு' நூல்வெளியீட்டு விழாவின்போது, நூல் ஆய்வுரை நிகழ்த்திய கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பிரதி அதிபர் சி.சிவலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும், கல்லூரி அதிபர் க.இராசதுரை, கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.தங்கராசா ஆகியோர் அருகே நிற்பதையும் காணலாம்.

# கலாசார சீரழிவைத் தடுக்க குருநகரில் கலந்துரையாடல்!

(கொக்குவில்)

சமூகச்சீரழிவுகளைத் தடுப்பது தொடர்பான பொதுக்கூட்டம் ஒன்றிற்கு குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி மாலை 6 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய முன்னணியில் இணைந்துள்ள 23 அமைப்புக்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் குருநகர் மக்கள் அனைவரையும் மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (206)

# விறகுபொறுக்கச் சென்றபெண் மிதிவெடியில் சிக்கி படுகாயம்!

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் விறகுபொறுக்கச்சென்ற குடும்பப்பெண் ஒருவர் மிதிவெடியில் சிக்கி காலில் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றையதினம் தயிலங்கடவை வடக்கு புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தின்போது இரண்டு பிள்ளைகளின் தாயான சிவரத்தினம் தவமணி (வயது 35) என்பவரே காலில் படுகாயமடைந்தவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

தனது வீட்டிற்குச் சமீபமாக காணியொன்றில் விறகுபொறுக்கச் சென்றவேளை மிதிவெடியில் சிக்கி காலில் படுகாயமடைந்தார்.

இவர் யாழ்.போதனா வைத்தியசாலை அவரச சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவருகின்றார். (தீ, 111)

# எட்டுத் தமிழக மீனவர்களையும் அபராதத்துடன் விடுவிக்க உத்தரவு

கடந்த ஆண்டு நயினாதீவு, நெடுந்தீவு கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடித்த 8 தமிழக மீனவர்களுக்கு, தலா 2500ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அபராதம் செலுத்தத் தவறின் 3 மாத கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என, யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி டி.எஸ்.வரதராசா உத்தரவிட்டார்.

சென்ற டிசம்பர் மாத காலப் பகுதியில் தென்னிந்தியா இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தலைமை படகோட்டிகளான இந்த எட்டு மீனவர்களும், நயினாதீவு, நெடுந்தீவு கடற்பகுதியில் அத்துமீறிப் பிரவேசித்து மீன் பிடித்ததாக கைதுசெய்யப்பட்டு, யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரினால், யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு, மேல் நீதிமன்ற நீதிபதி வரதராஜா முன்னிலையில், நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த நிக்கலஸ் ஜேம்ஸ், சில்வேலஸ் கிறிசோக், அந்தோனியஸ் ஆரோக்கியதாஸ், வெள்ளை மருதன் முத்துப்பாண்டி, முத்துக்கோவில் பிச்சை, இராசதுரை வெனிஸ்ரன் தானுமுருகன், செல்வம் ஜெபலன், ஆகியோருக்கெதிராகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவர்கள் தங்கள் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். எனவே மீனவர்களுக்காக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருந்த சட்டத்தரணி குடும்ப வறுமைநிலைமைகளை கருத்திற்கொண்டு குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு மன்றிடம் கேட்டுக்கொண்டார்.

இதற்கமைய நீதிபதி தனது தீர்ப்பில் அத்துமீறி மீன் பிடிக்கும் செயல்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. இதனால் எமது நாட்டு மீனவர்கள் பாதிப்படைகின்றனர். எனவே எதிரிகளுக்கு தலா 2500 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

எதிரிகளோ, அல்லது வேறு யாருமோ இப்பணத்தினைச் செலுத்தலாம். அபராதம் செலுத்தத் தவறிய எதிரி மூன்றுமாதம் கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும். இந்த எட்டு மீனவர்களினதும் படகுகளையும், அவற்றுடன் கூடிய உபகரணங்களையும் பறிமுதல் செய்யுமாறும் நீதிபதி உத்தரவிட்டார். இதேவேளை, இந்த எட்டு மீனவர்களுக்கும் விதிக்கப்பட்ட அபராதத்தினை நல்லெண்ண அடிப்படையில் வடமாகாண மீனவர் சங்கத் தலைவர் செலுத்துவதற்கு முன்வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (202)

### கந்தரோடை விநாயகர் மஹோற்சவம்

கந்தரோடை அருளானந்த விநாயகர் கோவில் மஹோற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், அடுத்த மாதம் முதலாம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (101)

### கர்ப்பிணித்தாய்மாருக்கு ஜீவாகாரம்

(உடுவில்)

வலிவடக்கு பிரதேச சபையின் மூலதன நன்கொடை நிதியிலிருந்து கர்ப்பிணித் தாய்மாருக்கு ஜீவாகாரம் வழங்கப்படவுள்ளது.

ஒருவருக்கு அரைக்கிலோ வீதம் வழங்கப்படும் இத்திட்டத்திற்கென 26 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. தாய் சேய் சிகிச்சை நிலையங்களில் வைத்து, சுகாதார வைத்திய அதிகாரிகள் மூலமாக இவை வழங்கப்படும். (101)

### பயிற்சி முடித்தவர்களுக்கான கொடுப்பனவு வழங்கல்!

(கொக்குவில்)

யாழ்- கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் முதல் காலாண்டு பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறிய மாணவர்களின், ஏப்ரல் மாத ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறு கல்லூரி அதிபர் இ.செபஸ்தியாம்பிள்ளை கேட்டுக்கொண்டுள்ளார். எதிர்வரும் 24 ஆம் திகதி காரியாலய நேரத்தில் கல்லூரிக்கு வருகை தந்து கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (206)



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் ஜி.ரி.சற் உதவியுடன் கட்டப்பட்ட புதிய கட்டடத்தை யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் திரை நீக்கம் செய்வதையும், அருகில் பாடசாலை அதிபர் எஸ்.சண்முககுமார், கோட்டக்கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ்.காங்கேயன் ஆகியோரையும் காணலாம். (101)

நிரஞ்சனாஸ் சங்கானை
20.05.2004 முதல் சிம்பு, ரக்சிதா நடித்த
தம்
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00.(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு, இரவு : 8.45(பு.நே.)
SLIVER
(சி-2386)

ராஜா யாழ்ப்பாணம்.
5 ஆவது கடைசி வாரம்
இளைய தளபதி
விஜய், திரிஷா நடித்த
கில்லி

காட்சிநேரம்:-10.30,2.30,6.30,9.30 (பு.நே)
21 ஆம் திகதி முதல்
ஆயுதஎழுத்து
(சி-2387)

நாகம்ஸ் சுன்னாகம்
5 ஆவது வெற்றிவாரத்தை நோக்கி
இந்தியாவிலும் இலங்கை மிழும் ஏக தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன்
விக்ரம், ஜோதிகா,
கபாலி, வடிவேலு
நடித்த
அருள்

(சி-2397) (நீல்ஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறதிநாள் வரையான நுழைவுச் சீட்டுக்களை ரசிகர்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள்.
குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூன்று ரசிகர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.
1 ஆம் பரிசு - துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு - C.D பிளேயர் ஒசாக்கி
3 ஆம் பரிசு - மேசை மின் விசிறி

பொதுசன நூலகம்

## மாகாணசபைத் தேர்தலில் ஐ.தே.கவுடன் இணைந்து இ.தொ.க. போட்டியிடும்

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் மத்திய, ஊவா, மேல் மாகாண சபைகளில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடும் என அறிவித்துள்ளது.

அதேநேரம், சப்பிரகமுவா மாகாணத்தில் தனித்துப் போட்டியிட இருக்கின்றது.

இதேவேளை - மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பாக மலையக மக்கள் முன்னணி ஆலோசனை செய்து வருகின்றது. தேர்தலில் போட்டியிடும் முறை குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

# ரவூப் ஹக்கீம் மீது பாலியல் குற்றச்சாட்டு; விசாரணைக்கு 5பேர்கொண்ட குழு நியமனம்!

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்-தமது தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் மீது சுமத்தப்பட்டுள்ள பாலியல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் முகமாக, ஐந்து பேரைக்கொண்ட விசாரணைக் குழுவொன்றை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நியமித்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக கருத்துத் தெரிவித்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம், இந்தக்குற்றச்சாட்டைக் கூறிய பெண்ணை கடந்த இரண்டு வருடங்களாகத் தனக்குத் தெரியுமெனக் குறிப்பிட்டுள்ளதுடன், தனக்கும் அந்தப்பெண்ணுக்கும் இடையில் எதுவித பாலியல் தொடர்புகள் இருக்கவில்லையெனவும் தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்கத்தின் பங்களிப்புடனேயே தம்மீது இத்தகைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

இதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் மீது சுமத்தப்பட்டுள்ள இத்தகைய குற்றச்சாட்டுக்கள், அந்தக்கட்சிக்குள் பிளவுகளை தோற்றுவிக்க வழிகோலும் என அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் திருமணம் செய்து கொள்வதாக உறுதிகூறி, தன்னோடு நீண்டகாலம் தொடர்புகளை வைத்திருந்து விட்டு ஏமாற்றிவிட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மேவின் ஜே. கூரேயின் மகள் குமாரி கூரே தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சக்தி வாய்ந்த குண்டு கொழும்பில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாலத்துறை பண்டாரநாயக்க மாவத்தையிலேயே இந்த குண்டு கண்டெடுக்கப்பட்டது. சுமார் ஏழு கிலோ எடையுள்ள இந்தக் குண்டு படுகொலை முயற்சிகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று பொலிஸ் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி அஜித் பேதுரு ஆராய்ச்சி தெரிவித்தார்.

கிறாண்ட்பாஸ் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து நேற்று முன்தினம் இரவு இந்தக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. பை ஒன்றினுள் பொதி செய்யப்பட்டிருந்த இந்தக் குண்டுடன் ஆறு கிரனேட்டுக்களும் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# திருமலை வீடொன்றிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு



படம்: சசிகுமார்

திருகோணமலை பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை ஜமாலியா அகதிமுகாமிலுள்ள ஒருவரின் இருப்பிடத்தைச் சோதனையிட்டபோது, பெருமளவிலான வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 22 ஜெலிக்னைட், 25 டெட்டனேற்றர், 35 மீற்றர் நீளமான திரி என்பன மறைத்துவைக்கப்பட்டிருந்தபோது கண்டு பிடிக்கப்பட்டது. டோச்லைட் ஒன்றினை சோதனையிட்டபோது, அதில் 25 டெட்டனேற்றர்கள் அடங்கிய பெட்டி முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பின்னர் மேலும் தேடியபோது ஏனைய வெடி பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டது.

மீன்பிடித் தொழிலுக்குப் பயன்படுத்த இந்த வெடிபொருட்கள் அங்கு வைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட வீட்டிலிருந்த மீன்பிடித் தொழில் செய்யும் அப்துல் ரஹ்மான்கியாத் மொகமட் என்பவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

## கந்தப்பொல வன்முறை தொடர்பாக

# நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் அரசு மீது தமிழ் எம்.பிக்கள் கண்டனம்!

தற்போதைய அரங்கத்தினால் சமாதான முயற்சிகளை முறையாக முன்னெடுக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராசா மகேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றைய நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசு ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்துள்ளது. ஜே.வி.பி தமிழருக்கெதிரான கட்சி. இவர்களால் சமாதான முயற்சிகளை சரியான வழியில் முன்னெடுக்கமுடியாது.

தற்போதைய அரசு ஆகக் கூடியது இன்னும் சில மாதங்களே நீடிக்குமென, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராசா மகேஸ்வரன் தனது ரையில் தெரிவித்தார்.

கந்தப்பொல விவகாரத்தைக் கண்டிக்கும் வகையிலான சுலோகத்தை ஏந்தியவாறு தியாகராசா மகேஸ்வரன் சபை அமர்வுகளில் கலந்துகொண்டார்.

கந்தப்பொல தொடர்பான விவகாரதத்தில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பொ.சந்திரசேகரன் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

அதன்போது குறுக்கிட்ட ஆளும் கட்சியினர் ஒழுங்குப் பிரச்சினையை ஒன்றைக் கிளப்பினர்.

கந்தப்பொல சம்பவம் தமிழர்களுக்கு விடுக்கப்பட்ட ஒரு அச்சுறுத்தல் என சந்திரசேகரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கூட தமிழர்கள் தமது கருத்துக்களை முன்வைக்க முடியவில்லை. தமிழர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள். தமிழர்கள் பாதுகாப்பற்ற நிலையே காணப்படுகின்றதென்றும், சந்திரசேகரன் தனது உரையில் தெரிவித்தார்.

இதேவேளை தமிழர்களைக் கொலை செய்து நட்டஈடு வழங்குவதனால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாதென்று இலங்கைத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கந்தப்பொல தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு நாடாளுமன்றத்தில் உரை நிகழ்ததிய அவர், இத்தகைய கொலைச் சம்பவங்கள் தொடர்கதைகளாகவே உள்ளன என்றும் தெரிவித்தார்.

இத்தகைய வன்முறைகள் சமாதான நடவடிக்கைகளைப் பாதிக்குமென்றும் அவர் குறிப்பிட்டார்.

கந்தப்பொல தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன், கந்தப்பொல விவகாரம் ஒரு இனப்பிரச்சினையல்ல. இதனைப் பெரிதுபடுத்தி சிலர் அரசிடம் இலாபம் ஈட்ட முயல்வதாகக் குறிப்பிட்டார்.

# அமெரிக்காவுடனான உறவுக்கு புதிய அடித்தளம் இடப்பட்டது!

## தமது விஜயம் குறித்து கதிர்காமர் கருத்து

புதிய அரசாங்கம் அமெரிக்காவுடனான உயர்மட்ட தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்குத் தேவையான அடித்தளமாக தனது அமெரிக்க சுற்றுப்பயணம் அமைந்துள்ளதாக, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

அமெரிக்க விஜயத்தை முடித்துவிட்டு நேற்று முன்தினம் நாடு திரும்பிய வேளை விமான நிலையத்தில் வைத்து கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் - அமெரிக்காவில் பலதரப்பட்ட பிரமுகர்களைச் சந்தித்தேன். அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொலின் பவல், பிரதி இராஜாங்க செயலாளர், ஆகியோரையும் நாட்டின் வர்த்தக சமூகத்தினரையும் சந்தித் தேன்.

விசேடமாக புதிய அரசாங்கம் அமெரிக்காவுடன் புதிய தொடர்புகளை வைத்திருக்க விரும்புகின்றது என நான் அவர்களுக்குத் தெரிவித்தேன் என்று அவர் மேலும் கருத்து தெரிவித்தார். (01)

# படையினர் கொல்லப்படுவதை தடுக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும்

## விமல் வீரவன்ச கோரிக்கை

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கத் தலைமையிலான கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசின் செயற்பாடுகளால் விடுதலைப் புலிகள் இன்று வரை தமது சுதந்திரம் தொடர்பாக மிகவும் மகிழ்வுடன் உள்ளதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மட்டக்களப்பில் அண்மையில் இராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதற்கும், படையினர் மீதான குண்டுத் தாக்குதலுக்கும் விடுதலைப் புலிகள் தான் காரணமெனத் தெளிவாகத் தெரிவதாகவும், அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு எழுதியுள்ள கடிதத்திலே தெரிவித்தார்.

எவ்வாறாயினும் முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசு சமநிலையாக விளங்கிய இராணுவ தகுதி நிலைகளை விடுதலைப் புலிகளுக்கு வழங்க முடியாது. இதனாலேயே இராணுவத்தளபதி விடுதலைப் புலிகள் தம்முடனான சந்திப்புக்களில் இராணுவ தகுதிநிலைகளைப் பயன்படுத்தக் கூடாதென போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு தெரிவித்தார். கடந்த அரசில் இந்த விடையத்தைக் கூற இராணுவத் தளபதிக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.



அத்துடன், சமாதானத்தை ஏற்படுத்துவதில் தாம் ஆர்வமாக இருப்பதாக காட்டிக்கொள்ளும் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக அரச படையினர் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே, விடுதலைப் புலிகளால் படையினர் தொடர்ச்சியாக கொல்லப்படுவதை நிறுத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விமல் வீரவன்ச கேட்டுள்ளார்.

# ஐந்துகோடி ரூபா போதைப்பொருளுடன் இலங்கைத் தமிழர் மும்பையில் கைது

இந்தியாவின் வர்த்தக நகரான மும்பையில் - சர்வதேச சந்தையில் சுமார் ஐந்துகோடி இந்திய ரூபா மதிப்புள்ள ஹெரோயின் போதைப் பொருளுடன் இலங்கைத் தமிழர் ஒருவர் உட்பட இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மும்பையில் கைது செய்யப்பட்ட இருவரிடம் இருந்தும் சுமார் ஐந்து கிலோகிராம் எடையுடைய ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

டாட்டா சுமோ வாகனம் ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட இந்தப் போதைப்பொருட்களை போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸ் கைப்பற்றியதாகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

டாட்டா சுமோ வாகனத்தின் உரிமையாளரான கேரளாவைச் சேர்ந்த ஏ.என்.பிள்ளை என்பவர் கைது செய்யப்பட்டார்.

இதையடுத்து அவர் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் இலங்கைத் தமிழரான சங்கர் செல்வன் குட்டி (வயது 38) என்பவர் கைது செய்யப்பட்டார்.

இந்த இருவரும் பொலிஸாரால் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டு, ஜூன் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

# தேர்தலில் தோல்வியுற்றோருக்கு உயர் பதவி வழங்க வேண்டாம்

## ஜே.வி.பி சந்திரிகாவுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தவர்களை பிரதான அரச நிறுவனங்களில் பதவி வகிக்க அனுமதிக்க வேண்டாமென ஜனாதிபதிக்கு ஜே.வி.பி. கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தவர்களை பிரதான அரச நிறுவனங்களில் முக்கிய பதவி வகிப்பதை அனுமதிக்க வேண்டாமென தாம் ஏற்கனவே ஜனாதிபதிக்கு அறிவுறுத்தியதாகவும், அவர் தமது கோரிக்கையை மதித்துச் செயற்படவில்லை எனவும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த பலர், துறைமுக மற்றும் கப்பற்துறை அமைச்சர் மங்கள சமரவீரவினால் துறைமுக கப்பற்துறை அமைச்சின் முக்கிய பதவிகளுக்கு நியமித்துள்ளமை குறித்தே ஜே.வி.பி இதனைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கிழக்கு மாகாண முஸ்லிம் கட்சியான தேசிய ஐக்கிய முன்னணியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்த எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா விமானநிலைய மற்றும் கப்பல் துறையின் முக்கிய பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மயிலணி கந்தசுவாமி கோயில் கும்பாபிஷேகம்

(மயிலணி)

சுன்னாகம் கந்தசாமி மயிலணி கந்தசுவாமி கோயில் நவகுண்ட பக்ஷ மகாகும்பாபிஷேகம் எதிர் வரும் 31 ஆம் திகதி திங்கட் கிழமை பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சிக்கான பூர்வாங்கக் கிரிகைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும்.

28 ஆம் திகதி வெள்ளிக் கிழமையாக பூசை ஆரம்பமாகி மறுநாள் பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் நிகழ்வு இடம்பெறும். (101)

# முரளிதரன் பற்றிய சர்ச்சையை அரசியலாக்க வேண்டாம்!

## அவுஸ்ரேலிய, இலங்கை பிரதமர்களுக்கு கோரிக்கை

இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் சர்ச்சையை அரசியலாக்க வேண்டாம் என்று சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் ஈஷான்மணி கேட்டுள்ளார்.

இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்துவீச்சாளர் முரளிதரன் பந்தை எறிகிறார், அவர் பந்து வீசவில்லை என்று அவுஸ்ரேலிய பிரதமர் ஜோன் ஹாவாட் கருத்துக் கூறியிருந்தார்.

இந்த நிலையில், முரளிதரனின் தூஸ்ரா பந்துவீச்சுக்கு தடை விதித்த சர்வதேச கிரிக்கெட் சபை மீது வழக்குத் தொடரப் போவதாக பிரதமர் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

முரளிதரன் விடயத்தில் அவுஸ்ரேலிய பிரதமர் ஜோன் ஹாவாட், பிரதமர் ராஜபக்ஷ இருவரும் ஒதுங்கியிருக்கவேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் ஈஷான் மணி கேட்டுக்கொண்டுள்ளார்.

முரளிதரன் பந்துவீச்சு விடயத்தில் சர்வதேச கிரிக்கெட் சபையின் நடவடிக்கை முற்றிலும் சரியானதே என்று கூறிய ஈஷான்மணி, இந்த விடயத்தை சர்வதேச கிரிக்கெட் சபை கையாள்வதற்கு வசதியாக ஹாவாட், ராபஜபக்ஷ இருவரும் ஒதுங்கியிருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து ஈஷான் மணி கூறியிருப்பதாவது,

முரளிதரன் சர்ச்சையானது ஊதி பெரிதாக்கப்பட்டுவிட்டது. ஏனெனில், பல்வேறு அரசியல்வாதிகள் கூறியுள்ள கருத்துக்களால் இந்த விடயம் பெரிதாக்கப்பட்டு விட்டது. இந்த விமர்சனங்கள் குறித்து நான் கவலைப்பட்டேன்.

உயர்ந்த பதவியில் இருப்பவர்கள் இந்த விடயம் குறித்து கருத்துக் கூறுவது என்பது உதவியாக இருக்காது. இவர்கள் கருத்துக் கூறுவதற்கு முன்னால் எங்களிடம் பேசியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

முரளிதரனின் தூஸ்ரா பந்துவீச்சுக்கு தடை விதித்ததில் தனக்கு எந்த வருத்தமும் இல்லை. எங்கள் மீது வழக்குத் தொடரப் போவதாக கூறப்பட்டுள்ளது.

எதன் அடிப்படையில் எங்கள் மீது வழக்குத் தொடரப் போகிறார்கள் என்று தெரியவில்லை. சர்வதேச கிரிக்கெட் சபை விதிமுறைகளுக்கு உறுப்பு நாடுகளின் முழு ஆதரவும் உள்ளது என்று இலங்கை பிரதமர் ராஜபக்ஷவின் கருத்துக்கு பதிலளிக்கையில் ஈஷான் மணி தெரிவித்தார்.

# லஞ்சம் கொடுக்க முயன்ற இந்திய வீரருக்கு 2 ஆண்டு தடை

(புதுடெல்கி)

கிரிக்கெட் வீரர் அபிஜித் காலே இந்திய ஏ அணியில் இடம்பிடிப்பதற்காக தேர்வுக்குழு உறுப்பினர்களான கிரண் மோரே, பிரணாப் ராய் ஆகியோருக்கு லஞ்சம் கொடுக்க முயன்றதாக புகார் கூறப்பட்டது. தேர்வுக்குழு உறுப்பினர்களே இந்தக் குற்றச்சாட்டை கூறியதால் இது மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டது.

இதைத் தொடர்ந்து காலேயை கிரிக்கெட் சபை தற்காலிகமாக இடைநிறுத்தியது.

அபிஜித் காலே மீது கூறப்பட்டுள்ள புகார் உண்மைதானா என்பதைக் கண்டறிய 3 பேர் கொண்ட ஒழுங்கு நடவடிக்கைக் குழு அமைககப்பட்டது.

இந்தக் குழு கடந்த 2 வாரங்களுக்கு முன்பு அபிஜித் காலேயிடம் விசாரணை நடத்தியது. இந்த விசாரணையின்போது தான் குற்றமற்றவர் என்பதை அபிஜித் காலேயால் நிரூபிக்க முடியவில்லை. அவருக்கு பல முறை வாய்ப்புக் கொடுக்கப்பட்டது என்றாலும், அவரால் தான் ஒரு நிரபராதி என்பதை நிரூபிக்க முடியவில்லை.

காலே மீது குற்றம்சாட்டிய கிரண் மோரே, பிரணாப் ராய் ஆகியோரிடம் அவரே குறுக்கு விசாரணை செய்ய 3 பேர் கொண்ட குழு அனுமதித்தது. அப்படியும் அவரால் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க இயலவில்லை.

இதைத் தொடர்ந்து அபிஜித் காலேக்கு 2 ஆண்டுகள் தடை விதிககப்படலாம் என்று கூறப்படுகிறது. ஒழுங்கு நடவடிக்கைக்குழு விரைவில் கூடி இது குறித்து அறிவிக்கும்.

# விளையாட்டு

# பிரெஞ் ஓபன் ரெனிஸிலிருந்து ஜஸ்டின் ஹெனின் விலகல்!



எதிர்வரும் பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டியில் பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் பங்கேற்பது சந்தேகத்திற்கிடமாகியுள்ளது.

பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டிகள் வரும் 24 ஆம் திகதி தொடங்குகின்றது. மகளிர் ரெனிஸ் போட்டிகளில் நம்பர் - 1 வீராங்கனையான ஜஸ்டின் ஹெனின் இந்தப் போட்டியில் விளையாடுவது சந்தேகத்திற்கிடமாகி யுள்ளது. வைரஸ் காய்ச்சலால் அவதிப்படுவதால் ஹெனின் இந்தப் போட்டியில் பங்கேற்பது சந்தேகம் என்ற தகவலை அவரது இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

இது குறித்து ஹெனினின் இணையத்தளம் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது, தனக்குப் பிடித்த பிரெஞ் ஓபன் போட்டியில் விளையாட தேவையான அனைத்து முயற்சிகளையும் ஹெனின் எடுத்துவருகிறார்.

துரதிர்ஷ்டவசமாக அவர் விளையாட முடியாத நிலை ஏற்பட்டால் தொடர்ந்து நம்பர் 1 இடத்தில் அதாவது குறைந்தது 7 வாரகால அளவிற்கு இந்த இடத்தில் ஹெனின் நீடிப்பார் என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

# நியூஸிலாந்து கிரிக்கெட் அணியில் மீண்டும் நதன் அஸ்லே இணைப்பு!

(லண்டன்)

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கான நியூஸிலாந்து அணியில் நதன் அஸ்லே இடம்பெற்றுள்ளார்.

இங்கிலாந்து, நியூஸிலாந்து அணிகளுக்கு இடையோன டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகின்றது. இந்த டெஸ்ட் போட்டி லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறும்.

ஏறக்குறைய ஒரு வருட காலமாக சர்வதேச போட்டிகளில் விளையாடாமல் இருந்துவரும் வேகப்பந்து வீச்சாளர் ஷேன் பொண்ட் அணிக்கு திரும்பியிருந்தாலும் எதிர்பார்த்தபடி முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடவில்லை.

நீண்டகாலமாகக் கணுக்கால் வலியால் அவதிப்பட்டு வந்த அஸ்லே மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார். கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பை போட்டிக்குப் பின்னர் அஸ்லேக்கு கணுக்காலில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இதனால், கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற இந்தியப் பயணத்தில் அஸ்லே கலந்துகொள்ளவில்லை.

மேலும் - பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகளுக்கு எதிரான தொடரிலும் அஸ்லே விளையாடவில்லை.

இந்த நிலையில், வீட்சில் அடுத்த மாதம் 3 ஆம் திகதி தொடங்கவிருக்கும் 2 ஆவது டெஸ்ட் போட்டி வரை பொண்ட் முழு உடற்தகுதி பெறமுடியாத நிலையில் இருப்பதாக நியூஸிலாந்து அணியின் பயிற்சியாளர் ஜோன் பிரேஸ்வெல் தெரிவித்தார்.

கிறிஸ் கெய்ன்ஸ், ஸ்கொட் ஸ்ரைறிஸ், ஜேக்கப் ஓரம் ஆகிய 3 சகலதுறை ஆட்டக்காரர்களும் நியூஸிலாந்து அணியில் இடம்பெற்றுள்ளனர்.



**நியூஸிலாந்து அணி:-**

ஸ்ரீபன் பிளெமிங் (கப்டன்), மார்க் ரிச்சர்ட்சன், நதன் அஸ்லே, ஸ்கொட் ஸ்ரைறிஸ், பிரெண்டன் மக்கலம், மக்மில்லன், ஜேக்கப் ஓரம், வெட்டோரி, டரல் ட.்.பி, கிறிஸ மார்ட்டின்.

## கலைவார நிகழ்வின் இன்றைய போட்டிகள்

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்தின் கலைவார நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதன் சிறப்பு நிகழ்வாக இன்று மாலை 4 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் கலைப்பீட விரிவுரையாளர்களுக்கும், கலைப்பீட இறுதி வருட ம்ாணவர்களுக்கும் இடையேயான சிநேகபூர்வ துடுப்பாட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியைத் தவிர நடைபெறவுள்ள ஏனைய போட்டிகள் - இன்று காலை 6.30 மணிக்கு இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கிடையிலான தாச்சிப் போட்டி, காலை 7.30 மணிக்கு முதலாம், நான்காம் வருட மாணவர்களுக்கிடையிலான தாச்சிப் போட்டி.

இன்றுமாலை 4 மணிகவு முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்கிடையிலான தாச்சிப் போட்டி மாலை 5 மணிக்கு மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கிடையிலான தாச்சிப் போட்டி.

இன்று மாலை 4 மணிக்கு முதலாம், நான்காம் வருட மாணவர்களுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டி இடம்பெறும்.

## அஸ்ரா கிண்ணத்துக்கான

# கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பம்!

அகில இலங்கை ரீதியில் பாடசாலை மட்ட 16 வயதுப்பிரிவு கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டியின் யாழ்.மாவட்ட போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று ஆரம்பமாகும் முதலாவது போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து புனித சம்பத்திரிசியார் கல்லூரி அணி மோதும் போட்டி நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் ஏ பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, பெரியபுலம் மகா வித்தியாலயம், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி என்பனவும் -

பி பிரிவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி என்பனவும் பங்குபற்றுகின்றன.

யாழ். மாவட்டத்தில் இந்த 12 பாடசாலை அணிகளைத் தவிர கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்.இந்துக் கல்லூரி என்பன யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றுகின்றன.

இவ்வணிகளில் பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் இவ்வருடமே கிரிக்கெட் ஆரம்பிக்கப்பட்டு அஸ்ரா கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (58)

# 2012 ஒலிம்பிக் போட்டிக்கு 9 நகரங்கள் விண்ணப்பம்

உலகின் மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவான ஒலிம்பிக் போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற்றுவருகிறது. 2000 ஆம் ஆண்டு சிட்னியில் இந்தப் போட்டி நடந்தது. இந்த ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டி ஓகஸ்ட் மாதம் எதன்சில் நடைபெறும்.

2008 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டி பெய்ஜிங்கில் நடைபெறும்.

2012 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டியை நடத்த நியூயோர்க் (அமெரிக்கா), லண்டன் (இங்கிலாந்து), மட்ரிட் (ஸ்பெயின்), மொஸ்கோ (ரஷ்யா), பாரிஸ் (பிரான்ஸ்), இஸ்தான்புல் (துருக்கி), லெய்பெக் (ஜேர்மனி), ரியோடி ஜெனீரோ (பிரேசில்), ஹவானா ஆகிய 9 நகரங்கள் விண்ணப்பித்தன.

இதில் 4 நாடுகள் போட்டியை நடத்துவதற்கான வாய்ப்பை இழந்துவிட்டன. லண்டன், நியூயோர்க், பாரிஸ், மொஸ்கோ, மட்ரிட் ஆகிய 5 நகரங்கள் தற்போது போட்டியில் உள்ளன.

அடுத்த ஆண்டு ஜூலை மாதம் நடைபெறும் சர்வதேச ஒலிம்பிக் கூட்டத்தில் 2012 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டியை நடத்தும் நாடு எது என்பது தெரியவரும்.

# ஜொலி ஸ்ரார் கிரிக்கெட் போட்டி; யங் ஸ்ரார் கழகம் இறுதிப்போட்டிக்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் அழைக்கப்பட்ட 10 விளையாட்டுக்கழகங்களிடையே நடாத்திவரும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ்.மத்திய விளையாட்டுக்கழகத்தை மிக இலகுவாக வெற்றிகொண்டு தெல்லிப்பளை யங் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய விளையாட்டுக்கழகம் 30 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் லதன், டியூறன், ராம்ஜி, ஜெயபாலன் ஆகியோர்முறையே 14,13,12,10 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

யங் ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் சுதாகர், கிருஷ்ணசந்திரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யங் ஸ்ரார் அணி 13.3 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 98 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது.

யங் ஸ்ரார் அணியின் சார்பில் துஷ்யந்தன் 35 ஓட்டங்க ளையும், ராஜித் 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

யாழ்.மத்திய விளையாட்டுக்கழகத்தின் சார்பில் விஜயகாந்த் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்தப் போட்டி - கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

(58)

# நியூஸிலாந்து முதல் டெஸ்ட் வோகன் ஆடுவது சந்தேகம்?



நியூஸிலாந்து கிரிக்கெட் அணி இங்கிலாந்து சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி இன்று லோர்ட்ஸ் மைதானத்தில் தொடங்குகின்றது. இந்தப் போட்டியில் இங்கிலாந்து கப்டன் வோகன் விளையாடுவது சந்தேகமே.

நேற்றுமுன்தினம் பயிற்சியின் போது அவரது வலது முழங்காலில் காயம் ஏற்பட்டது. இதனால் உடனடியாக ஓய்வு அறைக்குத் திரும்பி விட்டார். இந்த காயத்திலிருந்து வோகன் குணமடையா விட்டால் முதல் டெஸ்ட் போட்டிக்கு டிரெஸ்கோதிக் கப்டனாக இருப்பார்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்திக்கு வளமுள்ளோர் உதவி வழங்க முன்வரவேண்டும்

## அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவிப்பு



(வடமராட்சி)

கடந்த இருபது வருட காலமாக எமது மண்ணில் சிங்களப் பேரினவாத அரசு மேற்கொண்ட கண்மூடித்தனமான யுத்தத்தினால் எமது மக்களின் உடமைகள் அனைத்தும் அழித்தொழிக்கப்பட்டன. உயிர்கள் அழிக்கப்பட்டு அங்கங்கள் ஊனமாக்கப்பட்டும் உள்ளன.

இவ்வாறு, கிளிநொச்சி நோயாளர் விடுதித் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், தமிழீழ அரசியற்துறைத் துணைப பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது -

சிங்களப் பேரினவாத அரசு நீண்ட காலமாக எமது மண்ணில் மக்கள் வாழ்விடங்களில் மேற்கொண்ட பாரிய தாக்குதலால் உயிர் அழிப்பு மற்றும் உடமைகள் அழிப்பு, புலம்பெயர்வு என்பனவற்றையே எம் மக்களுக்குப் பரிசாக வழங்கியுள்ளது. இவற்றிற்கு கிளிநொச்சி வைத்தியசாலையே சான்றுபகர்கிறது.

இருபது வருட காலமாக எமது மண்ணில் சிங்களப் பேரினவாத அரசு மேற்கொண்ட கண்மூடித்தனமான யுத்தத்தின் மூலம், எமது மக்களின் உடமைகள் அழித்தொழிக்கப்பட்டு, உயிர்கள் அழிக்கப்பட்டு ஊனமாக்கப்பட்டுமுள்ளனர். குறிப்பாக, இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெறவந்த நோயாளர்கள் கூட குண்டுவீச்சினால் உடல் சிதறிப் பலியான சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

வைத்தியசாலை என்று தெரிந்தும் கூடப் பேரினவாத அரசு இந்த வைத்தியசாலையைக் குண்டு வீசி அழித்தது. இந்த நிலையிலும் யுத்த நிறுத்த சமாதான காலத்தில் மக்கள் எதிர்பார்த்திருந்த அபிலாஷைகள், அதாவது இயல்பு நிலைக்குத் திரும்பாமையென்பது, மீள்கட்டுமானப் பணிகள் தோற்றுவிக்கப்பட்டமை, மக்கள் மனதில் கவலையினையே தோற்றுவித்தது.

வடக்கு - கிழக்கு எமது தாயகம். இதையுணர்ந்து உதவி வழங்க முன்வருபவர்கள் - மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கூடிய கவனம் எடுத்து உதவிகளை வழங்க முன்வரவேண்டும். சமாதானத்தின் மூலம் எந்தவித நன்மைகளும் கிட்டவில்லையென்றும், ஜப்பான் நாட்டின் உதவியுடனான இந்தக் கட்டுமானப் பணியென்பது மக்களுக்கு சிறுமன நிறைவை அளித்துள்ளதென அவர் மேலும் தெரிவித்தார். (17)

## பத்திரகாளி அம்மன் ஆலய மணிவிழா

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் தர்ம பரிபாலனசபையின் மணிவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மேற்படி கோவில் முன்றலில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த மணிவிழாவையொட்டி 60 பக்கங்கள் கொண்ட விழா மலர் ஒன்று வெளியிடப்படுவதுடன், சபையின் மூத்த உறுப்பிர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். (17)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : ம.நிருஷிகா
முகவரி : வேலணை.

### இரண்டாவது அகவையில்



பெயர் : அ.மிதுஷன்
முகவரி : தொல்புரம்

### இரண்டாவது அகவையில்



பெயர் : பி.மிதுஷா
முகவரி : மிருசுவில்.

### மூன்றாவது அகவையில்



பெயர் : த.சுஜிந்தன்
முகவரி : சுன்னாகம்.

### பத்தாவது அகவையில்



பெயர் : தி.உமாசங்கரி
முகவரி : சங்குவேலி.

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------------------------
முகவரி :------------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்

## வாராந்த நிகழ்வு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்படும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாண கல்லூரியில் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இதன் அறிமுகவுரையை ந.நிர்மலானந்தன் வழங்குவார். (17)

## உலக வங்கிக் குழு 25 ஆம் திகதி யாழ். வரவுள்ளது

உலக வங்கிக் குழுவொன்று எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயவே இந்தக் குழு வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# மட்டுப்படுத்தப்பட்டளவானோருக்கே நிவாரணம் வழங்க நடவடிக்கை!

நிவாரணத்தை மட்டும் நம்பியிருக்கும் குடும்பங்களுக்கு மாத்திரமே நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.செயலகப் புனர்வாழ்வுக் கிளை தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு மாதத்திற்குரிய நிவாரணங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படாதிருக்கும் நிலையில், வடக்கு - கிழக்கில் வாழும் பெரும் எண்ணிக்கையானோர் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு அவசிய தேவையாக நிவாரணம் வழங்கவேண்டி உள்ளவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் வரையான குடும்பங்கள் நிவாரணம் பெறுகின்றன. அவற்றில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் யாழ். மாவட்டத்திற்கு வருகைதந்த குடும்பங்கள் மற்றும் நலன்புரி நிலையங்களில வசிக்கும் குடும்பங்கள், உயர் பாதுகாப்பு வலயங்களில் தமது வீடுகளை இழந்து பிறபிரதேசங்களில் வாழ்வோர் முதலானோருக்கே தற்போது நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

அவ்வாறாயின் சுமார் 75 ஆயிரம் வரையிலான குடும்பங்கள் நன்மையடைய முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது. மிகுதிக் குடும்பங்களுக்கான நிவாரணம் அரசாங்கத்தின் அறிவித்தல் கிடைத்ததும் வழங்கப்படும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை, வடக்கு - கிழக்குப் பகுதியில் வாழும் மக்களுக்கான நிவாரணம் நிறுத்தப்பட்டிருப்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## 44 பாடசாலைகளில் கூட்டுறவுச் சங்கங்கள்

(ஆழியவளை)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 44 பாடசாலை கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவருவதாகக் கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய நான்கு மாவட்டங்களிலுமுள்ள கூட்டுறவு உதவி ஆணையாளர் பிரிவுகளிலுமே இந்த 44 பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவருகின்றன.

இந்த நான்கு மாவட்டங்களிலுமுள்ள நான்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் பிரிவுகளிலும் 4379 உறுப்பினர்களை இந்தப் பாடசாலைக் கூட்டுறவு சங்கங்கள் கொண்டுள்ளன.

இந்தப் பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கென 14 விற்பனை நிலையங்கள் இயங்கிவருகின்றன. (122)

## ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் - மின்சாரம், கடற்தொழில், வீதி, விவசாயம், போக்குவரத்து என்பன தொடர்பாக முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகக் தெரிவிக்கப்படுகிறது. (91)

## விடுதலை நூல் திருமலையில் அறிமுகம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவ ஆசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தின் 'விடுதலை' நூல் அறிமுக விழா திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

தமிழீழ கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த அறிமுகவிழா, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை நகர மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

# தெல்லிப்பளை அரச மருந்தகங்களுக்கு மருந்துகள் அனுப்பப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட, அரச மருந்தகங்களுக்கு இதுவரை இரண்டாம் காலாண்டிற்கான மருந்துகள் அனுப்ப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், இங்குவரும் நோயாளிகள் மருந்துகள் எதுவும் பெறாமல் திரும்பிச் செல்வதனைக் காணமுடிகின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு இரண்டாம் காலாண்டிற்கு மருந்து வகைகள் ஏற்கனவே வந்துள்ள நிலையிலேயே, அரச மருந்தகங்களுக்கு மருந்துகள் அனுப்பப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இந்தப் பகுதியிலுள்ள அரச மருந்தகத்தில் பணிபுரியும் வைத்தியர் ஒருவர் தெரிவிக்கையில் -

எமது மருந்தகத்தில் காய்ச்சலுக்கு வழங்கப்படும் பனடோல் கூட முடிவடைந்துவிட்டது.

அத்துடன் எமது மருந்தகங்களுக்கு மருந்தெடுக்க வருபவர்கள் மிகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்கள். இவர்கள் தமது நாளாந்த ஜீவனோபாயத்திற்கே மிகவும் கஷ்டமடைகின்றனர். இதில் நாமும் எமது மருந்தகத்தில் மருந்தில்லை, தனியார் மருந்தகங்களில் சென்று மருந்து வாங்குங்கள் என்று தெரிவித்து மருந்துச் சிட்டை எழுதிக் கொடுத்தால் அவர்கள் பணத்திற்கு எங்கே செல்வார்கள்.

அவ்வாறிருந்தும் எம்மிடம் மருந்து இல்லாத காரணத்தால் அவர்களைத் தனியார் நிறுவனத்தில் வாங்குமாறே நாம் மருந்துச் சிட்டைகளை எழுதிக் கொடுக்கின்றோம். இவ்வாறு மருந்துச் சிட்டைகளைத் தனியார் நிறுவனங்களில் வாங்குமாறு எழுதிக் கொடுத்தே எமக்கு அலுத்துவிட்டது எனத் தெரிவித்தார்.




மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரால் நடாத்தப்படும் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கப்படும் வைபவம், 17 ஆவது முகாம் கரவெட்டியில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி எஸ்.திருநாவுக்கரசு பெண்மணி ஒருவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்குவதைப் படத்தில் காணலாம். (17)

# யாழ். நகருக்குச் சென்றவர் வீடு திரும்பவில்லையாம்!

## பொலிஸில் புகார்

கொக்குவில் பகுதியில் இருந்து சில தினங்களுக்கு முன்பு வீட்டிலிருந்து யாழ். நகரப் பகுதிக்குப் புறப்பட்ட இளைஞர் ஒருவர் இன்னமும் வீடு திரும்பவில்லையென யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மஞ்சவனாப்பதி வீதி, கொக்குவிலைச் சேர்ந்த 22 வயதான பாலச்சந்திரன் மனோராஜ் என்பவரே காணாமற்போனவர் ஆவார்.

இவர் தனது வீட்டில் இருந்து யாழ். நகரப் பகுதிச் செல்வதாக கூறிவிட்டு வீட்டில் இருந்து புறப்பட்டுச். சென்றார். ஆனால், நேற்றுமாலை வரை வீடு திரும்பவில்லையெனப் பொலிஸார் தெரிவித்தனர்.




தொழிற்துறை வளர்ச்சியானது மாற்றங்களை (change) அடிப்படையாகக்கொண்டே வளர்ந்துள்ளது. பொதுவாக மரபு பற்றி அல்லது பழமை வாதம் பற்றி பேசுபவர்கள் மாற்றங்களை விரும்புவதில்லை. மனிதனது மரபுரீதியிலான பழக்க வழக்கங்கள் என்பது வேறு. தொழிற்துறை மாற்றங்கள் என்பது வேறு என்பதை வேறுபடுத்தி அணுகினால், தொழிற்துறையில் மாற்றங்களை மேற்கொள்வது இலகுவாக இருக்கும்.

பல நிறுவனங்களில் சில நடைமுறைகளைப் புதிதாகப் புகுத்த எத்தனிக்கும் பொழுது, தமது பழைய நடைமுறைகளை மாற்ற நிறுவன முகாமையில் உள்ளவர்கள் ஒத்து வருவதில்லை. இதற்கு பல காரணங்கள் உள்ளன.

- தாங்கள் பழகிக்கொண்ட ஒரு விடயத்தைத் தொடர்ந்து பேணுவது இலகு என்ற மனப்போக்கு.
- மாற்றங்களை கொண்டு வருபவர் அல்லது அறிமுகப்படுத்துபவர் பற்றிய தவறான எண்ணம்.
- மாற்றங்கள் அதிகார வலு உள்ளவர்களால் மட்டும் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே, நாங்கள் மாற்றங்களைப் பற்றி சிந்திக்கத்தேவையில்லை என்ற கருத்து மனதில் பதிந்திருத்தல்.
- நிறுவனங்களிலுள்ள வேலைப்பழு காரணமாக மாற்றங்களைப் பற்றிச் சிந்திக்காதிருத்தல் அல்லது இது தகுந்த தருணமல்ல எனக் கூறிப்பிற்போடுதல்.
- மாற்றம் தமது பதவி, அதிகாரம் என்பவற்றுக்கு ஓர் அச்சுறுத்தலாக இருந்துவிடுமோ? என்ற எண்ணம்.
- புதிய விடயங்கள்பற்றி அறிந்துகொள்ள வசதியின்மை அல்லது புதிய கல்வித்திட்டங்களை உரியவர்கள் தயாரித்து நடைமுறைப்படுத்தமுடியாமை.

**தொழில் மாற்றங்கள் பின்வரும் அம்சங்களை கவனத்தில் எடுத்தல் வேண்டும்.**

அதாவது நல்ல விளைவுகளைத் தரத்தக்கதாக, அடிப்படைக் கட்டமைப்பை மாற்றக்கூடியதாக இருத்தல், இலகுவானதும், நடைமுறைப்படுத்தக் கூடியதாகவும் இருத்தல், முரண்பாடுகள் இல்லாததாக இருத்தல், பங்குபற்றுதல் ஊடாக மாற்றங்கள் அமைய வேண்டும், வேறுபாடுகளை குறைப்பதாக அமைதல் வேண்டும் என்பனவாகும்.

தொழில் மாற்றங்களை மேற்கொள்ளும்போது, சிறிய மாற்றம் நிகழும்போதும், மனித நடத்தையில் அல்லது விளைவுகளில் பெரிய மாறுதல்கள் ஏற்படக் கூடும்.

இது தொழிலானது நாளாந்த தனிப்பட்ட அலுவல்களைப் பாதிகக்கும். தனிப்பட்ட விருப்பங்கள் எண்ணங்களைச் சிதைத்து விடும். மாற்றங்களின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ளாமையால் இது தனது அல்லது நிறுவனத்தின் பணத்தையும் மனித வலுவையும், நேரத்தையும் வீணடிக்கும் செயலாகும்.

தொழில் மாற்றங்களை மேற்கொள்ளும் போது, பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். அதாவது, தொழில் மாற்றங்கள பற்றிய விளக்கம் அதனால் ஏற்படும் நன்மைகள் பற்றிய விளிபபு, தெளிவு என்பவற்றை அறிதல் நிலைமைகளுக்கு ஏற்றவாறு தொழில் மாற்றங்களை மேற்கொள்ளல் நடைமுறைப்படுத்துவதிலும் நேரடி ஈடுபாடுடையவர்களாக இருத்தல்.

தனிப்பட்டவர் மாற்றத்தை கொண்டுவர முயற்சிப்பதை பார்க்கிலும், நிறுவனமாக அல்லது குழுவாக முயற்சித்தல். இவ்வாறே மாற்ற முறைகளை தனிப்பட்டவர் ஊடாக அன்றி ஒரு நிறுவனத்தினூடாக அல்லது குழுவினூடாக முயற்சித்தல்.

மாற்றங்களை மேற்கொள்ளும்போது, அடிப்படைச் சட்டதிட்டங்களில் முரணபாடு உள்ளதா? என்பதை அவதானித்து, அவற்றுக்கு வேண்டிய திருத்தங்களை மேற்கொள்ளுதல் போன்றவையாகும்.

தொழில் மாற்றங்களை மேற்கொள்ளும் போது அல்லது அறிமுகம் செய்யும்போது அல்லது நடைமுறைப்படுத்தும்போது தனிப்பட்ட ரீதியிலும், குழு முறையிலும் சம்பந்தப்பட்டவர்கள் கூடுதலான நிதிசார் அல்லது நிதிசாராத ஊக்குவித்தல்களைப் பெற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மேலும், இந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஒரு நிகழ்ச்சியை நடத்துவது போன்ற ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

தொழில் மாற்றங்களில் எதிர்ப்புக்களைச் சமாளிக்க பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றலாம். அதாவது, பிரச்சினைகளை நுட்பமாக ஆராய்தல், நோக்கங்களை குழுநிலையில் ஆராய்தல், கூடுமானவரை எல்லோருக்கும் அறிவித்தல், நிறைவேற்றும் முறைபற்றி கலந்துரையாடுதல், வைபவங்களை விழாக்களைப் பயன்படுத்தல், நிலைமைகளை விளக்குதல் போன்றனவாகும்.

தொழில் மாற்றங்களின்போது பின்வரும் முறையில் ஒவ்வொரு தனிப்பட்டவர்களின் எண்ணங்களையும் பரீட்சித்துப் பார்க்க வேண்டும்.

| தனிப்பட்ட முறையில் | தொழில் ரீதியில் | ஏனையமுறையில் |
|---|---|---|
| எனது சொந்த நிலமை எவ்வாறு விருத்தியடையும் | எனது வேலைகள் எவ்வாறு மாற்றமடையும் | என்னைச்சார்ந்தவர்களும், பிணைப்புக்களும் எவ்வாறு மாற்றமடையும் |
| எனது சம்பளம் எவ்வாறு மாற்றமடையும் | வேலையின் மீதான பற்று எவ்வாறு மாற்றமடையும் | எனது மேற்பார்வை தரம் எவ்வாறு குறையும். |
| நிறுவனத்தின் மாற்றம் எதிர் காலத்தை எவ்வாறு பாதிக்கும் | எனது வேலைத்தளம் எவ்வாறு மாற்றமடையும் | நிறுவனத்தில் ஏனையோர்களுடன் எனது நிலைமை எவ்வாறு இருக்கும். |
| எனது மதிப்புக்கள் எவ்வாறு மாற்றமடையும் | எனது உள சுற்றுப்புற நிலைமைகள் எவ்வாறு மாற்றமடையும். | |

புள்ளிகள் -
0 - நாசவேலை,
1 - மெதுவாக இயங்குதல்,
2 - எதிர்ப்பைத் தெரிவித்தல்,
3 - அக்கறையின்மை.
4 - வேறுபாடான கருத்து.
5 - ஏற்றுக்கொள்ளுதல்.
6 - ஆதரித்தல்.
7 - பங்களிப்புச் செய்தல்.
8 - முழுமையாக ஈடுபடல்.

# தொழில் முகாமைத்துவ வளர்ச்சிக்கு கருத்து மாற்றம் அவசியம்!

### தொழில் மாற்றங்களை கொண்டுவர ஆகக்கூடியளவு அறிவித்தல்களை மேற்கொள்ளல்

| படிமுறை | அறிவிக்கும் முறை | எதிர்விளைவுகள் |
|---|---|---|
| தொழில் மாற்றங்களை இனங்காணல். | மாற்றமொன்று நிகழப்போகிறது என்பதை அறிவித்தல். | விளைவுகளை அவதானித்து மாற்றங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளுதல். |
| தொழில் மாற்றங்களைத் தீர்மானித்தல். | என்ன மாற்றம் ஏன் மாற்றப்படுகின்றது என்ற விபரங்கள். | தீர்மானம் எடுத்தல். |
| நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானத்தை வரைதல். | தீர்மானம் எவ்வாறு நிறைவேற்றப்படவேண்டும் என்பதை அறிவித்தல். | நடைமுறைப்படுத்தும் முறை |

- செல்வா



நுவரெலியா போன்ற ஈரத்தன்மையான பிரதேச வலயங்களில் உற்பத்தி செய்யும் பிரதானமான உற்பததியாக உருளைக்கிழங்கு காணப்படுகின்றது.

பதுளை மாவட்டத்தில் உருளைக்கிழங்கு உற்பத்தியை அதிகளவு செய்வதோடு - யாழ்ப்பாணம், புத்தளம், கற்பிட்டி ஆகிய மாவட்டங்களில் சிறியளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

உருளைக்கிழங்கு உற்பத்தி - நுவரெலியா, பதுளை போன்ற மாவட்டங்களில் வசிக்கும் விவசாயிகளுக்கு நல்லதொரு வருமானத்தைப் பெற்றுத்தருகின்ற உற்பத்தியாக இருந்தாலும், ஏனைய நாடுகளோடு ஒப்பிடும்போது இலங்கையில் உருளைக்கிழங்கு உற்பத்தி ஆகக்குறைவாகக் காணப்படுகின்றது.

# கூடிய விளைச்சலைத் தராத தரம் குறைந்த விதைகள்

மேலும் விதை உருளைக்கிழங்கு பெற்றுக்கொள்வதற்காக பணம் அதிகமாக செலவாவதோடு, உற்பத்திச்செலவும் அதிகமாகின்றது. இது சாதாரண செலவின் 50 % அதிகமாகின்றது.

2004 ஆம் ஆண்டுக்காக 7600 ஹெக்ரேயர் கொண்ட நிலத்தை உருளைக்கிழங்கு உற்பத்தி செய்வதற்காக ஒதுக்கி இருப்பதோடு, உயர்ந்த தரத்திலுள்ள விதைகளைத் தேவைகளுக்கு ஏற்றவாறு நமது நாட்டில் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது, இதனால் 40 -50% விதைகளை இறக்குமதி செய்வதுடன் மிகுதியான 50 - 60% விதைத்தேவைகளை தகுதியற்ற திட்டங்களை உபயோகித்து உற்பத்தி செய்வதன்மூலம் தற்போது விதைகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றது.

மேலும் உயர்ந்த தரத்திலும் அதிக விளைச்சலைப் பெற்றுத்தரக்கூடியதுமான உருளைக்கிழங்கு விதைகளைப் பெற்றுக்கொடுப்பது தேசிய உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்குள் இதுவரை தீர்வுகாண முடியாத பிரச்சினையாக இருக்கின்றது. குறைந்த தரத்திலுள்ள விதைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்த உருளைக்கிழங்கு உற்பத்தியில் நல்ல விளைச்சலைப் பெறமுடியாமல் இருப்பதோடு, இவ்வாறான உருளைக்கிழங்கு விதைகள் வெவ்வேறு நோய்களுக்கு உள்ளாகின்றன.

விவசாயத் திணைக்களத்தினால் பயிர்ச்செய்கைக்காக மேற்கொள்ளும் விதைகள் உற்பத்தி மூலம் விதைத்தேவையின் 3 % மட்டுமே நிறைவேற்றப்படுகிறது. தரமான உருளைக்கிழங்கு விதை உற்பத்தி பல காரணங்களின் பாதிப்பினால் விளைச்சல் குறைந்துள்ளது.

இறக்குமதி செய்யும் விதைகளின் தரம், விவசாயத் திணைக்களம் எதிர்பார்ப்பதுபோல் அதன் விலைகளும் விவசாயிகளுக்கு ஏற்றவாறு இல்லை.

அத்துடன் களஞ்சியப்படுத்தலினால் விதைகள் தேங்கிக்கிடப்பதுடன், விதையின் தரமும் பாதிப்படைவதோடு, நோய்களுக்கான அறிகுறிகளும், கிருமிகளின் பாதிப்பும், தாக்கமும் கூடுகின்றன.

இதேவேளை, விவசாயிகள் தரம் குறைந்த விதை களை உற்பத்தி செய்து வருகின்றனர். உற்பத்திக்கும் அதிக விதைகள் தரத்தில் குறைந்த மட்டத்தில் இருப்பதோடு, இதனால் வெவ்வேறு பாதிப்பான நோய்கள் ஏற்பட இடமுண்டு.

உயர்தரத்திலுள்ள நல்ல விளைச்சலைப் பெறக்கூடிய உருளைக்கிழங்கு வகைகளை உற் பத்தி செய்வதனால், உற்பத்திகளை அதிகரித் துக்கொள்ளமுடியும்.

அதேபோல் விதைகள் உருவாக்கும்போதும், விளைச்சலைப் பெறும்போதும், களஞ்சியப்படுத்தலின்போதும், விதைகளின் தரத்தை பாதுகாத்துக்கொள்வது மிக அவசியமாகும்.

எனவே உருளைக்கிழங்கு விளைச்சல் பற்றிய அறிவை வளர்க்கும் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவேண்டும்.

சசி சந்திரகாசன்

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 20/= | 40/= | 30/= | 30/= | 30/= | 20/= | 15/= |
| வெண்டிக்காய் | 25/= | 40/= | 30/= | 20/= | 40/= | 15/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 80/= | 60/= | 70/= | 70/= | 65/= | 80/ |
| கத்தரிக்காய் | 30/= | 35/= | 30/= | 20/= | 30/= | 20/= | 30/= |
| பாகற்காய் | 40/= | 60/= | 80/= | 60/= | 70/= | 40/= | 50/= |
| கரட் | 40/= | 60/= | 60/= | 80/= | 60/= | 50/= | 60/= |
| பீற்றூட் | 10/= | 25/= | 30/= | 10/= | 40/= | 12/= | 20/= |
| முருங்கக்காய் | 70/= | 60/= | 20/= | 20/= | 20/= | 30/= | 20/= |
| வெங்காயம் | 45/= | 40/= | 40/= | 40/= | 55/= | 40/= | 55/= |
| பச்சை மிளகாய் | 40/= | 40/= | 40/= | 35/= | 40/= | 30/= | 40/= |

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# பணத்தை கவனமாக கையாளுங்கள்



நாணய நோட்டுக்களைச் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் கொடுக்கல் வாங்கல்களை பிரச சினையின்றிக் கையாள முடியும். நாட்டில் பாவனையிலுள்ள நாணய நோட்டுக களைப் பரிசுத்தமாக வைத்தி ருப்பதன் காரணமாக, வெளி நாட்டவர்கள் நாம் எவ்வாறு சுத்தத்தைப் பேணுகிறோம் என்பதைக் கணித்துக் கொள்ள முடிகி றது.

நாணய நோட்டுக்களி லுள்ள பாதுகாப் பான குறியீ டுகளைச் சுத்த மான நாணய நோட் டுக்களி லேயே இலகு வாக அறிந்து கொள்ள முடிவதால், கள்ள நோட்டுக களை இனங்காண ஏதுவா கிறது.

அசுத்தமான நோட்டுக்கள் - தொற்று நோய்களை உருவாக் குவதால், பணநோட்டுக்களைச் சுத்தமாக வைத்தி ருப்பது மிக அவசியமாகிறது. பண நோட்டுக்களைச் சுத்தமாக வைத் திருப்பதற்கு நாம் பணநோட்டுக்களில் எழுதுவதையோ, உரு வங்களை வரைவதையோ தவிர்த்துக்கொள்ள வேண்டும். பண நோட்டுக்களை எந்தவிதத்திலும் விகாரப்படுத்தக்கூடாது.

பணநோட்டுக்களைக் கசக்குவதோ கிழிப்பதோ கூடாது. கறையான், எலி, பூச்சி போன்றவற்றால் பாதிப்பு ஏற்படாதவாறு பாதுகாப்பான இடத்தில் பணநோட்டுக்களை வைக்கவேண்டும்.

ஈரலிப்பான இடங்கள், மண் பாத்திரங்கள், கறைபடியக் கூடிய தகரப்பெட்டிகளில் பணத்தை வைப்பதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். தீயினால் பாதிப்பு ஏற்படாதவாறு பாது காப்பான இடங்களில் அவற்றை வைக்கவேண்டும். மேலும் அசுத்தமான கைகளினால் பணநோட்டுக்களைத் தொடுவ தையோ, காசு சேர்க்கும் உண்டியல்களில் பணநோட்டுக்க ளைத் திணிப்பதையோ தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

**கள்ளநோட்டுக்களை இனங்காணல்**

நாம் பரிமாறும் பணநோட்டுக்களில் 100, 500, 1000 ரூபா நோட்டுக்களில் சில கள்ளநோட்டுக்களாக இருப்பதாகப் பல தடவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனால் பெறுமதி கூடிய பணநோட்டுக்களைக் கையாளும்போது, அதிக கவனம் செலுத்தவேண்டும். கள்ளநோட்டுக்களை நல்ல நோட்டுக்களி லிருந்து வேறுபடுத்திக் காட்டும் பொருட்டே பாதுகாப்புக் குறி யீடுகள் பல இடப்பட்டுள்ளன. அவையாவன -

**❀ சிங்கத்தின் உருவம் பொறிக்கப்பட்ட நீர்க்குறியீடு.**

இதில் பழைய நாணய நோட்டுக்களில் சிங்கத்தின் உரு வம் பிரகாசமாகவும், புதிய நோட்டுக்களில் சிங்கத்தின் உருவத்தில் பொறிக்கப்பட்டுள்ள வாள் - சிங்கத்தின் உருவத்தைவிடப் பிரகாசமாக அமையும் விதத் தில் உருவாக்கப்பட்டுள்ளது.

**❀ பாதுகாப்புக்கோடு அல்லது நூல்**

இது தற்போது பாவனையிலுள்ள 500 மற்றும் 1000 ரூபா நோட்டுக்களில் ஸ்ரார் ட்ஸ்ற் **(Star dust)** என்று அழைக்கப்படும் பாதுகாப்பு நூலாகும்.

ஊடுருவிப் பார்க்கக்கூடிய **(See through Features)** குறியீடு.

இன்ரகிலியோ **(Intaglio)** என அழைக்கப்படும் அச்சுத் தொழில்நுட்ப முறையின்மூலம் நோட்டுக்களின் சில இடங் கள் கையினால் தொட்டுப்பார்க்கும் விதத்தில் உயரமாக அச்சிடப்பட்டுள்ளன.

விசேடமான அச்சியந்திரத்தின் மூலம் இலக்கங்கள் அச்சிடப்பட்டிருப்பதோடு, வர்ணம் இணைக்கப்பட்டுள்ளது.

பருத்தி கலந்த ஒட்டுப்பசை சேர்ந்த கடதாசியில் பண நோட்டுக்கள் அச்சிடப்பட்டுள்ளன.

அல்ற்றா வொய்லெட் **(Ultra violet)** விளக்கில் பணநோட்டுக்க ளைப் பார்க்கும்போது விசேடமாக சில இடங்கள் பிரகாசமாக இருத்தல்.

அச்சிடப்பட்டுள்ள நோட்டுக்களை ஒரு பக்கம் சாய்த்து நோக்குமிடத்து, பணநோட்டுக்களில் கீழ் மத்தியில் வெளிச் சத்திற்கு மிளிரும் வகையில் பணநோட்டின் பெறுமதி குறிப் பிடப்பட்டிருக்கிறது.

**❀ பழுதடைந்த பணநோட்டுக்களுக்கான முழுப்பெறுமதியை மீளப்பெறல்**

தவிர்க்கமுடியாத காரணங்களால் தீ, நீர் அல்லது பூச்சி, புழுக்களால் உங்களின் பணநோட்டுக்கள் பழுதுபட் டால், அதற்கான பெறுமதியை மீளச்செலுத்தும் பொறுப்பு நிதிச்சட்டத்தின்கீழ் (ஈ) ஒழுங்கு விதிகளுக்கு அமைய மத்திய வங்கியின் உரிமையைப் பொறுத்ததாகும்.

பழுதான நோட்டுக்களுக்கான முழுத்தொகை மீளப்பெறு வதாயின், பணநோட் டுக்கள் போலியா னவையாக இருக்கக் கூடாது. பழுதடைந்த நோட்டுக்கள் அதன் முழுவடிவில் முக்கால் வாசிப்பங்காக இருக்க வேண்டும். பணநோட் டுக்களின் வலது பக் கம் மற்றும் இடது பக்கத்திலுள்ள ஆரமப இரண்டு இலக்கங் களில் ஒரு இலக்க மாவது தெளிவாக இருக்கவேண்டும். பணநோட்டுக்கள் பல வேறு துண்டுகளாக கிழிந்திருப்பின் அவை குறிப்பிட்ட நோட் டின் பகுதிகளை இனங்காணக்கூடியதாக இருக்கவேண்டும்.



இலங்கை மத்திய வங்கி ஆளுநர் விசேட அதிகாரத்தின் பிரகாரம் எல்லாவிதமான பழுதடைந்த நோட்டுக்களுக்கும் பணம் மீளச்செலுத்துவது அவரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. உங்கள் வசமுள்ள பழுதடைந்த அல்லது விகார மான பணநோட்டுக்களுக்கான பெறுமதியை மீளப்பெறமுடி யுமா என்பதை அறிந்துகொள்வதற்கு, அத்தகைய நோட்டுக் களை கொழும்பு மத்திய வங்கியில் அல்லது மத்திய வங்கியின் பிரதேசக் காரியாலயங்களில் ஒப்படைக்கமுடியும்.

# தொழில் நிறுவனம் சிறப்பாக இயங்க கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குமுறைகள்



தொழில் நிறுவனம் ஒன்று சிறப்பாக இயங்க வேண்டியது அவசியமாகும். அந்த நிறுவனத்தின் உற்பத்தியைப் பெருக்கு வதற்கும் அதிகரிப்பதற்கும் இது அவசியமானதாகும். இந்த வகையில் தொழில் நிறுவனம் ஒன்றின் நேரத்தை சரியாகக் கடைப்பிடிப்பவர்களையும், குறைந்த நேரத்தில் குறைந்த வேலைகளைச் செய்பவர்களையும் இனங்காண்பது அவசியம். இவ்வாறான இனம்காணல் - நிறுவனத்தின் தொடர்ச்சியான இயங்கு தன்மைக்கு வழிவகுக்கும்.

தொழில் நிறுவனம் ஒன்றில் இனம்காணப்படவேண்டிய இன்னொரு முக்கியமான விடயமும் காணப்படுகின்றது. நிறுவன வேலை நேரத்தை வீணடிப்பவர்களை இனம்காண்கின்ற நட வடிக்கையே அந்த விடயமாகும்.

நிறுவனத்தில் கடமைபுரிகின்ற அனைவரும் தமது கடமை களை சரியாகச் செய்வார்கள் என்று கருதிவிடமுடியாது. ஒருசிலர் தமது நேரத்தை எவ்வாறு போக்கிக்கொள்வது என பது தெரியாமல் இருப்பார்கள். வேலைகளை சரியாகச் செய்ய மாட்டார்கள். இவ்வாறு தமது கடமை நேரத்தை வீணடிப்ப வர்களை இனங்கண்டு கொள்ளுதல் முதலில் அவசியமான ஒன்றாகும்.

கிடைக்கக்கூடிய நேரத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வதற்கு முதலில் செய்யவேண்டிய வேலைகள் பலவுண்டு. இவற்றில் முக்கியமானது வேலை செய்யக்கூடிய நேரத்தின் அளவைக் கூட்டுதலாகும். பொதுவாக பல வழிகளில் வேலை நேரம் இழக்கப்படுகின்றது. வேலை நேரத்தை குறைக்கும் காரணிகள் பலவாகக் காணப்படுகின்றன.

தொழில் நிறுவனம் ஒன்றின் பாவனையில் தொலைபேசிகள் இருக்க வேண்டியது அவசியமாகும். தொழில் நிறுவனங்களின் முக்கிய தேவைகளுக்காக அவற்றை பயன்படுத்த வேண்டும். இல்லையெனில் தொலைபேசிகளினால் வேலை நேரம் இழக் கப்படுவதை தடுக்கமுடியாது.

தொழில் நிறுவனத்தில் கடமையில் இருக்கின்றபோது தனிப்பட்ட சில விருந்தினர்கள் வருகை, வேலை நேரத்தை குறைப்பதாக அமைந்துவிடுகின்றது. இதனை போக்குவதற்கு சுருக்கமான உரையாடல் அவசியமான ஒன்றாகும். ஒரு விட யம் பற்றிய உரையாடல் நீண்டு செல்லாமல் பார்ப்பது இதில் முக்கியமானது.

நிறுவனத்தில் அடிக்கடி இடம்பெறும் கூட்டங்கள், நிறு வனத்தின் வேலை நேரத்தை குறைக்கின்றன. வேண்டிய நேரத்தில் அவசியமானது என்று கருதும் பட்சத்தில் மட்டுமே கூட்டம் கூட்டப்பட வேண்டியது அவசியமாகும்.

மற்றவர்களிடம் கையளிக்கப்பட்டிருக்க வேண்டிய வேலை களை கையளிப்பதென்பது உடனடியாகச் செய்யப்பட வேண் டும். அவ்வாறு இல்லையெனில், வேலை நேரம் வீணடிப்பது தவிர்த்துக் கொள்ளமுடியாது.

குறித்த விடயம் ஒன்றின் தீர்மானத்தை எடுக்கமுடியாமல் இருக்கும். இந்த நிலையில் குறித்த வேலையின் நேரம் வீணடிக்கப்படும் சூழ்நிலை உருவாகும்.

ஒரு வேலையைத் தொடங்கும்போது முழுமையான தக வல்களைப் பெறாமல் வேலையை தொடங்குதல் நேரத்தை பெரிதும் வீணடிக்கும். முழுமை பெறாத தகவல்களைக் கொண்டு வேலையை ஆரம்பித்தால் வேலையை முழுமை யாகச் செய்யமுடியாத நிலையும் தோன்றலாம்.

நிறுவனத்தில் வேலைசெய்யும் தொழிலாளர்களுடன் தொடர்பு கொள்வதில் ஏற்படுகின்ற சிக்கல்களும் நேரத்தை வீணடிப்பதாக அமையும்.

முகாமை செய்பவரின் நெருக்கடியான சூழலும் வேலைக் குரிய நேரத்தை வீணடிக்கும். மன அழுத்தம் இன்றியும், களைப்பின்றியும் வேலையை செய்யும்போதே திறமையாகச் செய்யமுடியும்.

முகாமைத்துவத்தின் ஊடாக மன அழுத்தம் கிடைக் கின்றபோது, வேலையை இலகுவில் செய்யமுடியாத நிலை உருவாகும்.

தெளிவற்ற செய்தித் தொடர்பும் - நேரத்தை வீணடிப்ப தாகவே அமைந்து விடும். ஒரு நிறுவனத்தின் தொழில்நுட்ப அறிவு போதாமல் இருந்தாலும், வேலைசெய்யும் நேரத்தைக் குறைத்துவிடும்.

தெளிவற்ற நோக்கங்கள் தேவையற்ற விடயங்களுக்கு முன்னுரிமை அளித்தல், போதிய திட்டமிடல் இல்லாமை போன்ற காரணங்களும் நேரத்தை வீணடிக்கும் காரணிக ளாகும்.

ஒரு நிறுவனத்தில் இவற்றை இனங்காண்பதன் ஊடாக இவற்றைத் தவிர்த்து, அதிகரித்த உற்பத்தியையும் இலாபத் தையும் பெற்றுக்கொள்ளலாம்.

- பூ. நகுலன்.

# தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | முடிவு திகதி |
| --- | --- | --- | --- |
| தலைமை மனித வளம், ஈகிள் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட், ஈகிள் கவுஸ் 75 குமாரன் ரட்ணம் றோட், கொழும்பு -02 | எழுதுவினைஞர் (வயது 19 -24 வருடங்கள்) | க.பொ.த. (உ/த)2 பாட சித்தி. மேலதிக தகமை - கணக்கியல் தகவல் தொழில்நுட்பம், காப்புறுதி. | 26.05.2004 |
| குழு மனிதவள அதிகாரி ஹேமாஸ் சந்தைப்படுத்தல் (பிறைவெட்) லிமிட்டெட் 36, பிரஸ்டல் ஸ்ரீட், கொழும்பு -01 | விநியோக விற்பனை பிரதிநிதி | க.பொ.த. (உ/த) இரண்டு வருட விற்பனை அனுவபம், சாரதி அனுமதிப் பத்திரம் | 26.05.2004 |
| முகாமையாளர் தனிப்பட்ட, அபான்ஸ் லிமிட்டெட், 498 ஜோல் றோட், கொழும்பு - 03 | கணக்கியல் நிறைவேற்றுனர் | CIMA, 2 வருட வேலை அனுபவம், ஆங்கில, கணக்கியல் அறிவு. | 23.05.2004 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# கல்வி பொதுத் தராதரப் பத்திர (உ/த) 2004

## மாதிரி வினாத்தாள்

## இந்துநாகரிகம் II

'அ' - பகுதியிலுள்ள முதலாம் வினாவுக்கும், ஆ பகுதியிலுள்ள எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி 'அ'

பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1) சிவஞானபோதத்தின் புடைநூல் என வழங்கப் பெறுவது.
அ. சிவப்பிரகாசம் ஆ. சிவஞானசித்தியார் இ. திருக்களிற்றுப்படியார்
ஈ. திருவுந்தியார் உ. திருமந்திரம்

1.2) விஷ்ணு தர்மோத்திரத்தின் ஒரு பகுதி.
அ. பிரமசூத்திரம் ஆ. சித்திரசூத்திரம் இ. தர்மசூத்திரம் ஈ. கற்பசூத்திரம்
உ. நாட்டிய சாஸ்திரம்

1.3) தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள நகரிலுள்ள தலம்.
அ. சிதம்பரம் ஆ. ஸ்ரீரங்கம் இ. தஞ்சைப் பெருங்கோயில் ஈ. காசி
உ. வடபழனி

1.4) சங்கீத மும்மூர்த்திகளில் 'வெங்கட் சுப்பிரமண்யசர்மா' எனும் இயற்பெயர் உடையவர்.
(அ) தியாகராஜ சுவாமிகள் (அ) முத்துச்சாமி தீட்சதர் (இ) சியாமாசாஸ்த்திரிகள்
(ஈ) சீர்காழி கோவிந்தராஜன் (உ) பரதன்

1.5) சௌந்தர்ய லகரி எனும் நூலை எழுதியவர்.
(அ) மத்துவர் (ஆ) இராமானுஜர் (இ) சங்கரர் (ஈ) உமாபதிசிவாச்சாரியார்
(உ) இளங்கோவடிகள்

மேல்வரும் வாக்கியங்களில் சரியாயின் சரி (✓) எனவும், பிழையாயின் பிழை (×) எனவும் அடைப்புக்குறிக்குள் குறிப்பிடுக.

1.6) சங்கரரது அத்வைதம் இருமைக்கோட்பாட்டுக்கு எதிரானதல்ல. (.........)

1.7) வேதத்தில் இடம்பெறும் ரிதம் பற்றிய சிந்தனை இந்து தர்மக்கோட்பாட்டுக்கு அடிப்படையாக அமைந்தது. (.........)

1.8) சிவசின்னங்களில் ரிஷபமும் ஒன்று. (.........)

1.9) நாயக்கர் காலம் - கோபுரங்களின் வளர்ச்சிக்காலம் எனக்குறிப்பிடப்படுகின்றது. (.........)

1.10) தமிழகத்தில் பாண்டியர் குடைவரைக் கோயில்களை அமைத்தனர். (.........)

விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1.11) ஓவியக்கலையில் நன்கு தேர்ச்சிபெற்ற பல்லவமன்னன் ஒருவரின் பெயரைத்தருக?
.................................................................

1.12) சைவசித்தாந்தம் சித்சக்தி பற்றி கூறும்விளக்கம் யாது?
.................................................................

1.13) சிரஞ்சீவியர் எழுவரையும் குறிப்பிடுக?
.................................................................

1.14) இரட்சை, சாரம் என அழைக்கப்படும் சிவசின்னம் எது?
.................................................................

1.15) திருக்கோயில் வழிபாட்டின் போது தேவாரம், திருவாசகம் முதலியன ஓதப்படுதல் எவ்வாறு அழைக்கப்படும?
.................................................................

கீறிட்ட இடங்களை நிரப்புக.

1.16) மண்டுக்கிய உபநிடதத்தை விளக்க மண்டூக்கிய காரிகை என்ற நூலை எழுதியவர்- ........................ ஆவார்.

1.17) முந்திய பிறவியிற் செய்த பலன் .................... எனப்படும்.

1.18) ஆகமத்தில் சைவசித்தாந்த கருத்துக்களை உள்ளடக்கிய பாதம் .............. எனப்படும்.

1.19) விக்கிரகங்களை உருவாக்கும்போது சிற்பக்கலைஞன் மனதில் சிந்திப்பது ........................... ஆகும்.

1.20) ................, .........., ............, ..............., ................ என்பன ஐவகைத் தெய்வமணிகள் ஆகும்.

### இந்துநாகரிகம் II

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

பகுதி (ஆ)

2. "இந்து தத்துவ வளர்ச்சியில் மத்துவரது தத்துவக்கோட்பாடு மற்றுமொரு பரிணாமத்தை காட்டிநிற்கின்றது" இக்கூற்றினை மேல்வரும் தலைப்புக்களின் கீழ் பரிசீலிக்குக.
(அ) துவைதம் பற்றிய விளக்கம்.
(ஆ) இறைவன், ஆன்மா, உலகம் பற்றிய விளக்கம்.
(இ) முத்தியும் அதனை அடைவதற்கான வழியும்.
(ஈ) சங்கரர், இராமானுஜர் போன்றோரது கோட்பாடுகளில் இருந்து வேறுபடும் விதம்.

3. புராதன இந்துக்களது கல்வி முறை பற்றி ஓர் கட்டுரை வரைக.

4. சித்தாந்த தத்துவம் சுட்டும் பிரதான அம்சங்களில் கீழ்வரும் அம்சங்கள் குறித்து
அ. பிரமாண நூல்கள்.
ஆ. அடிப்படைக்கோட்பாடுகள்
இ. பதியினது இயல்புகள்

5. "நான்கு ஆச்சிரமங்கள் ஆன்மீக வாழ்க்கையை வளப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டவை" இக்கூற்றினைப் பரிசீலனை செய்க.

6. நடராஜர் வடிவத்தின் பிரதான அம்சங்களில் கீழ்வரும் விடயங்கள் குறித்து விளக்குக.
அ. இலட்சண விதி ஆ. தத்துவம் இ. சமயசமுதாய முக்கியத்துவம்.

7. பல்லவர்காலக் கட்டடக்கலை வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு, சோழர்கால கட்டடக்கலை வளர்ந்த வரலாற்றைக் குறிப்பிட்டுச் சோழர்கால கட்டடக் கலையின் பிரதான வளர்ச்சிக் கட்டங்களையும், பொதுப் பண்புகளையும் விளக்குக.

8. இந்து ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு இசைக் கலை வளர்ந்த வரலாற்றை ஆராய்க.

9. விஜயநகர நாயக்கர் கால கட்டடக் கலை வளர்ச்சியின் பிரதான அம்சங்களை, கீழ்வரும் விடயங்கள் குறித்து விளக்குக.
(அ) கோயில்கள்
(ஆ) மண்டப அமைப்பு
(இ) கோபுரங்கள்
(ஈ) தூண்கள்

10. கீழ்வருவனவற்றில் எவையேனும் மூன்று பற்றி சுருக்கமான குறிப்புக்கள் எழுதுக.
(அ) இந்துஓவியக்கலை
(ஆ) இந்து தர்மக்கோட்பாடு
(இ) தட்சணாமூர்த்தி வடிவம்.
(ஈ) அர்த்தசாஸ்திரமும், அரசியல் பொருளியல் சிந்தனைகளும்
(உ) பௌத்தமும், ஒழுக்கமும்
(ஊ) சிக்கல்

ப. ஜோதீஸ்வரன் B.A. (Hons)

## புவியியல் II

(சூழற் புவியியல்) (பகுதி - I)

பகுதி I இல் பல்தேர்வு வினாக்கள் 40 தரப்படும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடைகள் வினாப்பத்திரத்திலேயே எழுதப்பட்டு அதனைப் பகுதி II இன் விடைத் தாள்களோடு இணைக்கவேண்டும்.

கீழ்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பல விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தெரிவுசெய்து அவ் விடையின் இலக்கத்தைப் புள்ளியிட்ட கோட்டில் குறிக்க.

1. ஆட்டிக் வட்டத்துள் 24 மணி நேரமும் இரவாகவிருப்பது எந்தநாளில்?
(1) மார்ச் 21 இல் (2) டிசம்பர் 22 இல் (3) செப்டெம்பர் 23 இல் (4) ஜுன் 21 இல்

2. வடவரைக் கோளத்தில் குறைந்த இரவும், கூடிய பகலும் நிலவுவது எக்காலத்தில்?
(1) டிசம்பர் 22 இல் (2) மார்ச் 22 இல் (3) செப்டெம்பர் 23 இல். (4) ஜுன் 21 இல்

3. புவியின் உள்ளமைப்பின் அடிப்படையில் மையப்பகுதியில் இருந்து வெளிநோக்கி ஒழுங்கமைத்தால் வரும் சரியான தொகுதி?
(1) மேல் இடையோடு, கீழ் இடையோடு, வெளிமையம், உள்மையம்.
(2) வெளிமையம், மொஹோறோவிகிக் இடைவெளி, அஸ்தெனோஸ்பயர், புவியோடு
(3) வெளிமையம், கூட்டன்பேக் இடைவெளி, அஸ்தெனோஸ்பயர்
(4) மொஹோறோவிசிக் இடைவெளி, மேல் இடையோடு, அகமையம், வெளிமையம்.

4. பின்வருவனவற்றுள் எது குளிர்நீரோட்டமாகும்?
(1) அகுல்காஸ் நீரோட்டம். (2) குரோசிவோ நீரோட்டம்.
(3) பிரேசிலியன் நீரோட்டம் (4) கலிபோர்ணிய நீரோட்டம்

5. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும் பிரதான செயல்முறையினைத் தெரிவு செய்க?
(1) வளிமண்டலக் கதிர்வீச்சு (2) ஒளித்தொகுப்பு
(3) இயற்கைத் தேர்வு (4) சூழலின் சக்திப் பரிமாற்றம்

6. தொனோடோ (Tornadoes) என்பது.?
(1) பிரிதளச் சூறாவளியாகும்.
(2) வரண்ட பாலைவனங்களில் தோன்றும் காற்றின் படிதல் நிலவுருவமாகும்.
(3) வெப்ப, குளிர் வளித்திணிவுகள் சந்திப்பதால் ஏற்படும் சுழல் புயல் ஆகும்.
(4) சமுத்திரத்திரங்களில் அதிக உயரத்திற்கு எழும் அலைகளாகும்.

7. இலங்கையின் பாறைகளில் பெரும்பரன்மையானது உருவாகிய காலம்
(1) யுராசிக்காலம் (2) மயோசின் காலம்
(3) கேம்பிரியனுக்கு முந்திய காலம் (4) கொலோசின்காலம்.

8. உள்ளார்ந்த ஆவியாக்க ஆவியுயிர்ப்பு என்பது
(1) நீர் நிலைகளில் இருந்து ஆவியாதல் 2) சமுத்திரங்களில் இருந்து ஆவியாதல்
(3) புவிமேற்பரப்பில் இருந்து ஒட்டுமொத்தமாக ஆவியாதல்.
(4) தேறிய ஆவியாக்க ஆவியுயிர்ப்பு.

9. கூழாங்கல் நாக்குகள், கூர்முடிகள் என்பன ஆக்கப்படுவது முறையே
(1) கடல்களிலும், பனிக்கட்டிப் பகுதிகளிலும்
(2) தரைக்கீழ் நீர்வலயங்களிலும், கடல்களிலும்.
(3) வரண்ட பகுதிகளிலும், கடல்களிலும் (4) கடல்களிலும், ஆறுகளிலும்.

10. கடல்சார் உயிரினத் தொகுதிகளின் முதனிலை உற்பத்தியாக்கிகளாவன
(1) முருகைக் கற்கள் (2) பிளாங்ரன்கள் (3) நண்டுகள் (4) சுறாக்கள்

11. வளிமண்டலப் பகுதியில் பெருமளவு காணப்படும் இரண்டு வாயுக்களாவன
(1) நைதரசனும் ஹீலியமும் (2) நைதரசனும் நீராவியும்
(3) நைதரசனும் ஒட்சிசனும் (4) நீராவியும் ஒட்சிசனும்.

12. பின்வரும் கூற்றுக்களில் ஒன்று 'வெக்னரின்' கண்ட நகர்வுக் கோட்பாட்டுக்கு ஆதாரமாக முன்வைக்கப்பட்டது. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) மத்திய அத்திலாந்திக் சமுத்திரத்தில் தரை பரவியமை.
(2) அத்திலாந்திக் எதிர்க் கரையோரங்களின் பொருத்தம் சார் உயிர்ச்சுவட்டியல் சான்றுகள்.
(3) எரிமலைகள், புவிநடுக்கங்கள் தோன்றுதல்
(4) பலியோக் காந்தவியல் மற்றும் பலியோக் காலநிலை

13. முனைவுப் பிரதேசங்களில் உயரமுக்கம் ஆக்கப்படுவது
(1) புவியின் சுழற்சியினால் (2) கொரியோலிஸ் விசையினால்
(3) இப்பிரதேசங்களின் தாழ் வெப்ப நிலையால் (4) அயனத் தொடக்கத்தினால்

14. இயற்கைத் தாவரத் தொடர் என்பது
(1) இடைவெப்பக் காடுகளை
(2) குறிப்பிட்ட தாவரமொன்றில் தொடர்ச்சியாக ஏற்படும் மாற்றங்களின் தொடர்ச்சியினை
(3) இயற்கைத் தாவர அழிவினால் காலநிலையில் ஏற்படும் மாற்றங்களை
(4) தண்டிராத் தாவரங்களுக்கும், ஊசியிலைக் காடுகளுக்கும் இடையிலான நிலைமாறு வலயத்தை.

15) வளிமண்டலத்தில் மிகவும் உயர்வான படை.
(1) மாறன் மண்டலம் (2) படைமண்டலம் (3) புறமண்டலம் (4) அயனமண்டலம்

16) சுண்ணக்கல்லின் பிரதான கூறு.
(1) படிகம் (2) களிக்கல் (3) கல்சியம் காபனேற்று (4) தொலமைற்

17) கீழிறங்கல் வலயம் காணப்படுவது
(1) மோதும் இரு கண்டத் தகடுகளுக்கு இடையே
(2) பிரிந்து அகலும் இருதகடுகளிடையே
(3) வடமுனைக்கும் தென்முனைக்கும் இடையே
(4) மோதும் கண்ட சமுத்திரத் தகடுகளிற்கிடையே

18. சூழல் சார் ஒழுக்கவியலைச் சரியாகக் கூறும் கூற்று
(1) சூழலினைப் பாதுகாக்க உதவும் சமூக வழக்கங்களும் மரபுகளும்
(2) உள்ளூராட்சியால் செல்லுபடியாக்கப்பட்ட சூழல் சட்டங்கள்
(3) அரசு சாரா நிறுவனங்களின் எதிர்ப்புக்கள்
(4) சூழல் மாசடைதல் தொடர்பான சட்டங்கள்

19. வளங்குன்றா அபிவிருத்தி என்பது
(1) இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல்
(2) சூழலில் போதிய கவனம் செலுத்தும் அபிவிருத்தி
(3) இயற்கை வளங்களை கூடிய அளவு பயன்படுத்துதல்
(4) பழைய சமூக வழக்கங்களோடு அபிவிருத்திச் செயற்பாட்டை முன்னெடுத்தல்

20. ஓசோன் படையினைக் கொண்ட வளிமண்டலப்பகுதி
(1) மாறன் மண்டலப் பகுதி (2) இடை மண்டலப் பகுதி
(3) படைமண்டலப் பகுதி (4) அயன மண்டலப் பகுதி

21. அமில மழையினால் ஏற்படும் முக்கிய தாக்கம்
(1) தாவர, நீர் வாழ் உயிரின அழிவு (2) வான் போக்குவரத்து பாதிக்கப்படல்
(3) தரைகீழ் நீர்மட்டம் குறைதல் (4) வரட்சி தூண்டப்படுதல்

K.கிரிதரன் B.A(Hons), Geo, spl

(தொடரும்...)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*செறுநரைக் காணின் சுமக்க இறுவரை*
*காணின் கிழக்காம் தலை.*

திருக்குறள்

# நமது நோக்கு

## இந்தியாவின் ஆட்சிமாற்றமும் அரசியல் குழப்ப நிலைகளும்

இந்தியாவின் காங்கிரஸ் கட்சி தலைமையிலான கூட்டணி அரசாங்கம் இந்தவாரத்தில் பொறுப்பை ஏற்கும் நிலையில் என்றுமே குழப்பம் மிகுந்த இந்திய அரசியலில் புதிய பிரதமரை தேர்வு செய்வது தொடர்பான இறுதிமுடிவுகள் குறித்த உறுதியான செய்திகள் எதுவும் தெரியாத சூழலில் சோனியா காந்தி பிரதமர் பதவியை ஏற்க மறுத்து விட்டதாகவும் அவருக்குப் பதிலாக நிதியமைச்சராக ராஜீவ் காந்தி ஆட்சியின் போது பதவிவகித்த மன்மோகன் சிங் பிரதமராகலாம் என்ற செய்தி பிரபல்யமாகியுள்ளது.

நேற்று முன்தினம் நண்பகல் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்களைச் சந்தித்து புதிய அரசமைப்பது தொடர்பாக காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி கலந்தாலோசித்ததாகவும் அந்தச் சமயம் மன்மோகன் சிங் அவர்களும் அவருடன் இருந்ததாகவும் தெரிகிறது.

ஏற்கனவே சோனியா காந்தி பிரதமராவது நாட்டிற்கு பெருத்த அவமானம் எனவும் விதேசியரான அவரை பிரதமராக்கும் முயற்சிகளை நாடளாவிய ரீதியில் தாம் கடுமையாக எதிர்க்கப்போவதாகவும் கருத்து வெளியிட்டுள்ள பாரதீய ஜனதாக்கட்சியினர் நாட்டின் அதியுயர் ஆட்சிப்பொறுப்புள்ள பதவியை இந்தியரல்லாத ஒருவரிடம் ஒப்படைப்பதானது நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தென்றும் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் சோனியா காந்தி பிரதமர் பதவி ஏற்க மறுப்புத் தெரிவித்துள்ளார் என்ற செய்தி காங்கிரஸ் ஆதரவாளர்கள் மத்தியில் கடும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ள அதேவேளை அவரது அந்த முடிவைத் திருப்பப் பெறுமாறும் கோரி அவரது இல்லத்தின் முன்பும், காங்கிரஸ் கட்சி அலுவலகத்தின் முன்பும் அவர்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்து வருவதாகவும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், இந்திய நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் கூட்டத்தில் சோனியாகாந்தி கூறுகையில் - ஒரு விடயத்தில் நான் எப்போதுமே தெளிவாக இருந்து வந்துள்ளேன்... அதாவது எனது உள்ளுணர்வின்படியும், மனச்சாட்சியின் குரல் அடக்கத்தோடு இப்பதவியை மறுதலிக்க வேண்டும் என்றே கூறுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் பார்த்தால் அவர் ஒரு திடமான முடிவோடு இருக்கிறார் போல் தோன்றினாலும் கூட அரசியலில் மாற்றங்கள் திடீர்திடீரென ஏற்படலாம் என்பதையும் மறுதலிக்க முடியாதுதான்.

அவர் இம்மாதிரியான முடிவொன்றை எடுப்பதற்கு பல்வேறுப்பட்ட காரணிகள் இருக்கலாம். இந்துமதவாத பாராதீய ஜனதாக் கட்சியினரின் எதிர்ப்பு அவருக்கு மனச்சஞ்சலத்தை அல்லது மனக்கசப்பை எற்படுத்தியிருக்கலாம். அறுதிப் பெரும்பான்மைப் பலத்தை பெறாத நிலையில் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவை மட்டும் நம்பி ஆட்சியை பொறுப்பேற்பதால். ஏற்படக்கூடிய நெருக்கடிகளையும் சிக்கல்களையும் நன்றாக உணர்ந்தும்கூட இப்படியான முடிவை அவர் தேர்ந்தெடுத்திருக்கவும் கூடும்...

இதேவேளை புதிய அரசு தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் எதிர்கொள்ளவேண்டியுள்ள சவால்களை எதிர்கொள்ளும் மனோபலம், மனச்சாட்சியின் குரல்படி நடக்க விரும்பும் ஒரு தலைவருக்கு இருக்குமா என்ற சந்தேகமும் எழவே செய்கின்றது.

பாரதீய ஜனதா ஆட்சிக் காலத்தில் மேலோங்கியிருந்த இந்துத்துவ மதவாத சக்திகளின் தீவிர மத வெறியானது தேர்தல் தோல்வியின் பின் மேலும் அதிகமாகும் என்றே தோன்றுகின்றது. சோனியா காந்திக்கு எதிரான தற்போதைய பிரசார நடவடிக்கைகளே இதற்கு ஆதாரமாகும்.

பாகிஸ்தானுடனான எல்லை விவகாரங்களின் தொலைநோக்குச் சிந்தனையுடன் அரசியல் நகர்வுகளை தலைமை தாங்கி நகர்த்துவதில் அவருக்குப் போதியளவு திறன் இருக்குமா என்பதும் கேள்வியேயாகும்.

பொருளாதார அபிவிருத்தி - தனியார் மயமாக்கல் போன்ற நடவடிக்கைகளில் சர்வதேச சமூகத்தின் மற்றும் உலக மயமாதல் கொள்கைகளின் அழுத்தத்திற்கு ஏற்ப வளைந்துகொடுத்து செயற்பட தற்போது அவரது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள உதவும் இடது சாரிகள் ஒத்துழைப்பார்களா என்பது அடுத்த பிரச்சினையாகும்.

இலங்கை விவகாரங்களில் சோனியாவின் கட்சியில் இருக்கும் ப.சிதம்பரம், மணிசங்கர ஐயர் போன்ற அவரின் விசுவாசிகளுக்கும், ம.தி.மு.க. மற்றும் பாட்டாளி மக்கள் போன்ற கூட்டணி உறுப்பினர்களுக்கும் இடையில் ஏற்படக்கூடியதான கொள்கை முரண்பாடுகளுடன் ஒரு சரியானதும், தீர்க்கமானதுமான முடிவினை அவரால் மேற்கொள்ள முடியுமா?

இப்படிப் பல்வேறு பிரச்சினைகளை பிரதமர் என்ற பதவியில் இருந்துகொண்டு அவரால் எதிர்கொள்வது சிரமமாக இருக்கும் என்று நினைத்தும்கூட அந்தப் பதவியை அவர் ஏற்க மறுத்திருக்கலாம்.

மன்மோகன்சிங்கோ அல்லது வேறு யாரோ பிரதமரானாலும், காங்கிரஸ் தலைவி என்ற வகையில் அவரது ஒத்துழைப்புடனும், ஆலோசனையுடனுமே ஆட்சியை நடத்த வேண்டிய அவசியம் அவர்களுக்கு உண்டு என்பது நிராகரிக்க முடியாத உண்மையேயாகும்.

இந்தியாவில் குழப்பங்களுக்கு மத்தியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கப்போகும், புதிய அரசு மேற்கொள்ளப் போகும் நடவடிக்கைகள் தேசிய அரசியல் மற்றும் பிராந்திய அரசியல் கொள்கைகளில் ஆரோக்கியமானதும், ஆக்கபூர்வமானதுமான மாற்றங்களை அறிவுபூர்வமாக மேற்கொள்ள வேண்டிய அவசியம் உண்டு.

அது சாத்தியமாகுமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# நாடும் நடப்பும்




# நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்யுமாறு பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

போர்ச் சூழல் காரணமாக பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்கின்ற மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற நிவாரணம் கடந்த 15 வாரங்களாக வழங்கப்படவில்லை. இதனால் இந்த மக்கள் பட்டினி கிடக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, யாழ். மாவட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச உலருணவு நிவாரணம் தொடர்ந்து வழமைபோல் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின், ஒன்றியம், யாழ். அரசாங்க அதிபரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது. அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

யாழ். மாவட்டத்தில் வாழும் 80 வீதமான மக்கள் எவ்வித வருமானமும் இன்றியே வாழ்கின்றனர். போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ள போதும் எந்தவிதமான இயல்பு வாழ்வு நிலையும் தோன்றவில்லை. இந்த மக்கள் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி தங்களது நாளாந்த வாழ்வை நகர்த்திச் செல்ல முடியாமல் பரிதவிக்கின்றனர். இவர்களுக்கு இருக்கின்ற ஒரே ஆதாரம் இந்த இலவச உலர் உணவு நிவாரணம் தான். இதுவும் இல்லாவிட்டால் இவர்களது நிலை மிகவும் மோசமானதாக அமையும் என்பதை தங்கள் மேலான கவனத்திற்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

அதேவேளை இந்த இலவச நிவாரண விநியோகம் 50 வீதமாக வெட்டப்படும் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இது உண்மையாக இருக்குமானால் மக்கள் மிகவும் கொந்தளிப்பார்கள். இந்தச் செய்தி கேட்டவுடன் அவர்களது மனக் குமுறல்கள் எதிரொலிப்பதைக் கேட்கமுடிகிறது.

எனவே, அரைவாசியாக நிவாரண விநியோகத்தைக் குறைப்பது என்ற நிலை இருக்குமானால் அதனைக் கடுமையாக யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் எதிர்க்கும் என்பதை சுட்டிக் காட்டவிரும்புகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். பாடசாலைகளுக்கிடையிலான பூப்பந்து, மேசைப்பந்து போட்டிகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பூப்பந்தாட்ட மற்றும் மேசைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை முதல் 23 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன.

பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி உள்ளக அரங்கிலும், நாளை மறுநாள் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இதே அரங்கில் ஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளன.

இதே சமயம் பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டி 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கும், அதே தினத்தில் ஆண்களுக்கான போட்டி மாலை 1.30 மணிக்கு யாழ். மத்தியகல்லூரி உள்ளக அரங்கிலும் இடம்பெறவுள்ளது. (101,எல)

# முத்து நெடுமாறன் பங்கேற்கும் தமிழ் இணையக் கருத்தரங்கு

## கொழும்பில் நடைபெறவுள்ளது

(கொழும்பு)

இலங்கையில் தமிழ்மொழி ஊடான இணைய மற்றும் கணினி அறிவை விருத்தி செய்யும் முகமாக 'உத்தமம்' எனப்படுகின்ற உலகத் தமிழ்த் தொழில்நுட்ப மன்றத்தின் இலங்கைக் கிளை - கம்யூட்டர் ஃபோக்கஸ் கணினிச் சஞ்சிகை, வெப்தமிழன்.கொம் இணையத்தளம், ஐ.சி.ரி.ஏ, METRO CONSTRUCUION ஆகியவற்றின் அனுசரணையில் முழுநாள் கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

இந்தக் கருத்தரங்கில் இலங்கை வல்லுனர்களுடன் தமிழ் இணையத்தில் 15 வருடங்களுக்கு மேலான அனுபவத்தையுடைய மலேசியாவைச் சேர்ந்தவரும் உத்தமத்தின் தலைவருமான முத்து நெடுமாறன் கலந்து சிறப்பிக்கின்றார்.

இந்தக் கருத்தரங்கு எதிர்வரும் யூன் மாதம் 6 ஆம் திகதி கொழும்பிலுள்ள "கொன்கோட் ஹோட்டல்" இல் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இடம்பெற உள்ளது. கருத்தரங்கில் தமிழில் கணினி வளர்ச்சிப்பாதை, தமிழ் கணினி நியமங்கள் (விசைப் பலகை, யுனிகோட், எழுத்துருக்கள்), நவீன தொழில்நுட்பங்களில் தமிழ் (கைத்தொலைபேசி மற்றும் கையடக்க சாதனங்கள்) மற்றும் தமிழ் உட்பொதிவு அபிவிருத்தி ஆகிய விடயங்கள் ஆராயப்படவிருக்கின்றன.

கருத்தரங்கில் கலந்துகொள்பவர்களுக்காக மதிய உணவு, சிற்றுண்டி, தேநீர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நிகழ்வில் பங்கேற்பதற்கான பதிவுக் கட்டணம் ரூபா 500 என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இருக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றது.

யாழ்பாணத்தில் இல 61, கில்னர் வீதியிலுள்ள TITA கணினிப் பயிற்சி நிலையத்திலும், இல 120, அரசடி வீதியில் அமைந்துள்ள கம்பியூட்டர் போக்கஸ் அலுவலகத்திலும் பதிவுகளை மேற்கொள்ளமுடியும். மேலதிக தகவல்களை http// www.webtamilan.com இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

## தெல்லிப்பளை – முகமாலை இடையில் பஸ்சேவை ஆரம்பிக்கக் கோரிக்கை

(உடுவில்)

வலி. வடக்கு, வலி. தெற்கு மக்களின் நன்மை கருதி தெல்லிப்பளையில் இருந்து முகமாலை வரை தினமும் ஒரு தடவையாவது, புதிதாக பஸ் சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும் எனத் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை கொள்கையளவில் ஏற்றுக் கொண்ட இலங்கை போக்குவரத்து சபையினர் விரைவில் இதுபற்றி ஆராய்ந்து சாதகமான பதில் தருவதாக உறுதியளித்துள்ளனர். (101)

## உபதபாலக ஊழியருக்கு சம்பளம் வழங்கப்பட்டது

யாழ். பல்கலைக்கழகத்தின் உப தபாலகத்தில் இரண்டரை மாதங்களாகப் பணிபுரிந்து சம்பளம் கிடைக்கப்பெறாத ஒருவருக்கு மனித உரிமை ஆணைக்குழுவின் தலையீட்டால் தற்போது சம்பளம் கிடைத்துள்ளது.

வீ.திரிபுரசுந்தரி என்பவருக்கே இந்தச் சம்பளம் கிடைக்கப் பெற்றுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள உபதபாலகத்தில் அவர் பணிபுரிந்த காலம் மற்றும் சம்பளம் வழங்கப்பட்டமை தொடர்பாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவினர், யாழ். மாவட்ட பிரதி அஞ்சல் அத்தியட்சகருடன் பேசியதையடுத்தே இந்தப் பிரச்சினை தீர்த்துவைக்கப்பட்டதாக யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தெரிவித்தனர். (ப)

நேர்காணல் - பட்டனைந்து



# எங்களுக்கு ஒரு நாடு வேண்டும் அதை நாங்களே ஆளவேண்டும்

**நகைச்சுவை நடிகர், மற்றும் வில்லுப்பாட்டுக்கலைஞர். வண்ணக்கலைவாணர். நாடக மன்றத்தை நிறுவி, அதனூடாக நாடகங்களை மேடையேற்றி வந்த குழுவில் மூத்த உறுப்பினர் தன்னடக்கத்துடன் கலைப்பணி புரிந்துவருபவர் கலைஞர் பற்குணம் . அவ[illegible]காணச் சென்றபோது அவர் கூறிய கருத்துக்கள்......**

**கேள்வி:** உங்களுக்குக் கலைத்துறையில் ஈடுபாடு எப்படி ஆரம்பமானது?

**பதில்:** 1948 ஆம் ஆண்டு என நினைக்கிறேன். முத்திரைச்சந்தை கச்சேரி, நல்லூர் வீதியிலுள்ள காமாட்சி அம்பாள் மடாலயத்தின் ஆண்டுவிழாவுக்கு நாடகம் போட இளைஞர்கள் முடிவெடுத்தனர். அதில் நானும் உள்ளேன். என்னிடம் கலைஞர் கருணாநிதியின் 'நச்சுக்கோப்பை' நாடகநூல் இருந்தது. அதனைக் காட்டினேன். பின்பு அதனையே மேடையேற்றவும், அதில் நானொரு பாத்திரத்தைச் செய்வதாகவும் முடிவானது. இதுதான் எனது கலையுலகப் பிரவேசம்.

**கேள்வி:** கலைத்துறையில் நீங்கள் எந்ததெந்த விடயம் கலைத்தெரிவு செய்து ஈடுபட்டீர்கள்.

**பதில்:** நாடக, நடிப்புத்துறை, அதனிலும் நகைச்சுவைப் பகுதியை குறிப்பாகத் தெரிவு செய்து ஈடுபட்டுவந்தேன். அதனோடு வில்லிசையையும் சில நல்ல கருத்துக்களைச் சொலலப் பயன்படுத்தினேன்.

**கேள்வி:** அதற்கான காரணங்கள்...?

**பதில்:** மக்கள் மனம் நோகாமல் நல்ல கருத்துக்களைச் செய்யமுடியும். இந்த நாளில் பண்பாடு, தமிழகக் கலாசாரம், நல்லொழுக்கம் என்பவற்றைக் காணமுடியாமல் இருக்கிறது. எமது நாட்டு மக்களின் நடை, உடை, பாவனைகளைப் பார்க்கும்போது சிரிப்புத்தான் வருகிறது. அத்தகையவற்றை நகைச்சுவையூடாக மெலிதாகச் சீண்டிப் பார்க்கலாம் என்று ஆசைதான்.

**கேள்வி:** உங்கள் பரம்பரையில் நீங்கள் மட்டும்தான் இவைகளில் ஈடுபாடா அல்லது...?

**பதில்:** ஆமாம், இப்பொழுது எனது இரு புதல்வர்களும் ஈடுபட்டு வருகிறார்கள். எனது மூத்த மகன் (சாயி போட்டோ) கருணாநிதி என்னுடனும் வேறு நாடகங்களிலும் நடித்து வருகிறார். இரண்டாவது மகனும் நடித்து வந்தவர். வேலை காரணமாக வவுனியாவுக்குச் சென்றதால் குறைந்துவிட்டது.

**கேள்வி:** இதுவரை எத்தனை நாடகங்கள், வில்லுப்பாட்டுக்கள் செய்துள்ளீர்கள்?

**பதில்:** முதல் 'நச்சுக்கோப்பை', 'தூக்கு மேடை', 'இன்பக்கனவு', 'வீரமைந்தன்', 'திப்பு சுல்தான்', 'சரியாதப்பா', 'மிஸ்டர் கந்தப்பு', 'செல்லப்பிள்ளை' போன்றன. இவையெல்லாம் முழு நாடகங்கள். பதினைந்துக்கும் மேற்பட்ட ஓரங்க நகைச்சுவை நாடகங்கள் அடங்கும். இப்பொழுதும் 'பரியாரியார் பரமசிவம்' எனும் நகைச்சுவை நாடகங்கள் செய்து வருகிறோம். வில்லுப்பாட்டுக்கள் நூற்றுக்கு மேற்பட்ட மேடைகளில் அரங்கேறியுள்ளன.

**கேள்வி:** இவை தவிர வேறு எதுவும் கலைத்துறைப்பணிகள் செய்கின்றீர்களா?

**பதில்:** 1959 ஆம் ஆண்டு வண்ணைக் கலைவாணர் நாடக மன்றத்தை வண்ணைத் தியாகன், சோமசுந்தரம், சுப்பிரமணியம், ஸ்ரார் சலூன் மணியம், சிப்பித்தறை அன்னலிங்கம் ஆகியவர்களுடன் இணைந்து ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் சிறு நாடகங்களைப் போட்டோம். 'வீரமைந்தன்' நாடகம்தான் எமது மன்றத்துக்கு நற்பெயரையும், புகழையும் தந்ததுடன் எங்களுக்கும் துணிவையும் உற்சாகத்தையும் தந்தது. ஆயினும், மன்றத்தைக் காத்தவை- எனது தாயாரின் நகைகளும், வண்ணைத் தியாகனின் உதவிகளும்தான்.

**கேள்வி:** 60 களுக்கு முற்பட்ட கலைஞர்களில் இரண்டொருவர் தான் வாழ்ந்து வருகிறீர்கள். அவை பற்றிச் சொல்லுங்கள்?

**பதில்:** எனக்குத் தெரிந்த வரையில் அச்சுவேலி இரத்தினம், இணுவில் மாசிலாமணி, கன்னிகா பரமேஸ்வரி, தாவடியூர் கலைமணி, எஸ்.வடிவேல், எஸ்.டி.அரசு, லோகநாதன் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்களில் சிலர் வசதிகளோடும் வாழ்கிறார்கள். பெரும்பாலானவர்கள் கலை என்று புறப்பட்டு வாழ்க்கையில் ஒரு நிலையில்லாமல் போனவர்கள் தான். மேக்கப் இராசையா என்பவரும் அவர்களில் ஒருவராவர்.



கலைஞர் பற்குணம் இரு வேறு தோற்றங்களில்

**கேள்வி:** மறக்க முடியாத அனுபவங்கள் ஏதும்...?

**பதில்:** ஒரு தடவை யாழ்.இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் மேடைபோட்டு வண்ணக் கலைவாணர் நாடக மன்றத்தின் 'புகழ்பூத்த வீரமைந்தன்' நாடகம் நடைபெற்றுக்கொண்டு இருக்கையில், மேடையின் ஒரு பகுதி சரிந்துவிட்டது. அப்பொழுது தேனீர்க் கடை குமாரசாமி மற்றும் இரசிகர்களும் தோள்கொடுத்து நாடகம் முடியும் வரை உதவியமையை இன்றும் மறக்க முடியாது.

**கேள்வி:** கலைத்துறைச் சேவைக்கான பட்டம் பதவிகள் பற்றிக் கூறுங்கள்?

**பதில்:** குறிப்பாக, வீரமைந்தன் நாடக வசனம், அமைப்பு ஆகியவற்றைப் பாராட்டி சிவன் கோயிலடிக் கலைஞர் தெய்வேந்திரம் நடத்திய விழாவில் வைத்து, கலையரசு சொர்ணலிங்கத்தால் வழங்கப்பட்ட இரு சான்றிதழ்கள் மற்றும் கோணாந்தோட்டம், உதய தாரகை சனசமூக நிலையத்தால் வழங்கப்பட்ட 'சின்னக்கலைவாணர்' என்ற பட்டமும், மஞ்சவனப்பதியில் மதிமுக ராசாவினால் - நடிக மாமணிப்பட்டம், பொன்னாடை போர்த்திப் பாராட்டுப் பத்திரம் வழங்கியமை போன்றதைக் குறிப்பிடலாம்.

**கேள்வி:** எதிர்கால சிந்தனைகள் உண்டா?

**பதில்:** எங்கள் நாடு எங்கே போகிறது? நாங்கள் எங்கே போய்க்கொண்டு இருக்கிறோம்? நாட்டைப்பற்றி நாம் சிந்திப்பது மிக மிகக் குறைவு. எங்களுக்கு ஒரு நாடு வேண்டும். அதை நாங்களே ஆளவேண்டும். எங்களுக்கான ஒரு கொடி வேண்டும். இதுதான் எனது எதிர்காலச் சிந்தனையாக உள்ளது.

தமிழர் நாட்டிலே தமிழன் ஆட்சியை
தந்து மகிழடா தமிழா!
தமிழனுக்கென தனிக்கொடி ஒன்றை
தான் படைத்திடு தமிழா!

**கேள்வி:** உங்கள் அனுபவங்களை வைத்துக் கூற விரும்புவது...?

**பதில்:** 1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தனிச்சிங்கள சட்டம் நாடாளுமன்றில் நிறைவேறியது. அன்று தமிழரசுக்கட்சி யாழ்.நகரில் ஹர்த்தாலை நடத்தியது. நான் தனிச்சிங்களச் சட்ட நகலை பாடையில் வைத்து பறைமேளம் முழங்க, கொள்ளிக்குடம் ஏந்திப்போய் நமது தலைவர்கள் முன்பாக கொள்ளிவைத்து எரித்தேன். இன்று வரைக்கும் அந்தப் பிரச்சினைகள் - பல்வேறு தோற்றங்கள் எடுத்து நீண்டுகொண்டே போகிறது. அதனால் நாங்கள் எங்களுக்கு ஒரு நாடு வேண்டும் என்பதில் இம்மியும் அசையக்கூடாது.

**கேள்வி:** நிறைவாக நீங்கள் இளைய சமுதாயத்துக்குச் சொல்ல நினைப்பவை...?

**பதில்:** நல்லதைச் சொல்வாரும் இல்லை. நல்லதைக் கேட்பாரும் இல்லை.

வீரம் விலை போகாது. விவேகம் துணைக்கு வராவிட்டால் தீட்டிய வாளும், தினவெடுக்கும் தோள்களிலே தூக்கிய ஈட்டி மட்டும் போதாது. தோழர்களே நாம் தரும் அறிவாயுதத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள் என்று அன்று சொன்னானே சோக்கிரட்டீஸ் அதைத்தான் நான் இன்றும் சொல்லவேண்டியுள்ளது. கலைஞர் கருணாநிதி பாணியில்... ☆

---

மக்கள் பிரச்சினை - பரதேசி

# ஊடகவியலாளர் பயிற்சிநெறி குறித்த சில எண்ணங்களும், சந்தேகங்களும்

உலகில் முதன்முதலில் வெளிவந்த தமிழ்ப்பத்திரிகை உதயதாரகை. 1841 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தது. யாழ்ப்பாணத்தின் ஒரு சிறிய பட்டினமான சுன்னாகத்திலிருந்து வெளிவந்த - ஈழகேசரி வார இதழ் மொரீஷியஸ், பிஜி, பர்மா, மலேசியா போன்ற நாடுகளில் எல்லாம் சந்தாதாரர்களைக் கொண்டிருந்தது. (ஈழகேசரிப் பிரதிகள் யாழ்.பல்கலைக்கழக நூலகத்தில் உள்ளன). யாழ்ப்பாணத்திலுள்ள கிராமப்புற பாடசாலை ஒன்றின் மாணவர்களால் வெளியிடப்பட்ட 'புதுசு' சஞ்சிகை ஒரு தரமான இலக்கியச் சஞ்சிகை என, தமிழ் இலக்கியவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலரால் கொழும்பிலிருந்து வெளியிடப்பட்ட 'சரிநிகர்' தமிழ்ப் பத்திரிகை உலகில் ஒரு புரட்சியைச் செய்தது. 'சரிநிகர்' இந்தியாவில் மட்டும் நாற்பது சந்தாதாரர்களைக் கொண்டிருந்ததுடன், இந்தியாவிலுள்ள தலைசிறந்த எழுத்தாளர்கள் பலர் 'சரிநிகரில்' தமது ஆக்கங்களை வெளிக்கொணர்ந்தனர். சிங்களவர் ஒருவரால் யாழ்ப்பாணத்தில் வைத்து வெளியிடப்பட்ட **(Saturday Review)** ஜே. ஆரையே சீற்றம் கொள்ளவைத்தது.

பி.பி.சி தமிழோசையை ஆரம்பித்தவர் யாழ்ப்பாணத்தவரான சிவபாதசுந்தரம் என்பவர். சீன வானொலியில் தமிழ்ச்சேவையை ஆரம்பித்தவர் பாரதிநேசன் சின்னத்தம்பியாவார்.

ஆறரைக்கோடி சனத்தொகையைக் கொண்ட தமிழ் நாட்டிலிருந்து ஐந்து தினசரிகள்தான் வெளிவருகின்றன. ஆனால், ஆறரை இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட யாழ்ப்பாணத்தில் இருந்து நான்கு தினசரிகள் வெளிவருகின்றன.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் யுனெஸ்கோ நிறுவனத்தினதும் டென்மார்க் அரசாங்கத்தினதும் நிதியுதவியுடன், ஊடக மூலவள நிலையம் ஒன்றை ஆரம்பித்து யாழ்ப்பாணத்திலுள்ள ஊடவியலாளர்களுக்குப் பயிற்சி வழங்கிவருகிறது. இது வரை எட்டுப் பணியவைகள் நடைபெற்றதாகவும், அவற்றில் 260 ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டு பயிற்சிபெற்றதாகவும், ஊடக மூலவள நிலைய இணைப்பாளர் பேராசிரியர் சண்முகதாஸ் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் 260 ஊடகவியலாளர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கேட்கும்போது உள்ளம் பூரிப்படைகிறது. இந்த இருநூற்றி அறுபது பேரும் எந்தெந்த ஊடகங்களுக்கு நிருபர்களாகக் கடமையாற்றுகிறார்கள் என்பது சண்முகதாஸிடம்தான் கேட்ட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இரண்டு பத்திரிகையாளர் சங்கங்கள் உள்ளன. இரண்டு சங்கங்களும் தத்தமது சங்கங்களில் தலா முப்பது உறுப்பினர்கள் உள்ளதாகக் கூறுகின்றனர்.

இலங்கையில் வெளிவரும் பத்திரிகைகள் சுமார் ஐம்பது இருக்குமா என்பது சந்தேகம். மும்மொழிப் பத்திரிகைகளையும் வார நாளிதழ்களையும், வானொலி, தொலைக்காட்சி இரண்டையும் சேர்த்தாலும் பதினைந்து இலத்திரனியல் ஊடகங்கள் இருக்குமா என்பது சிந்திக்க வேண்டிய விடயம்.

யாழ்.பல்கலைக்கழக ஊடக மூலவள நிலையம் இதுவரை நடத்திய பயிற்சிப்பட்டறைகளில் ஒன்றுக்குக்கூட ஆங்கிலப் பத்திரிகைகள் .மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் ஊடகவியலாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விமான்கள் ஆங்கிலப் பத்திரிகைகள் வாசிப்பதில்லையா? வாசித்தால் சிலவேளை 'அட யாழ்ப்பாணத்திலும் ஆங்கிலப்பத்திரிகைகளுக்கு நிருபர்கள் இருக்கிறார்களா?' என்று எண்ணக்கூடும். அல்லது தனிய தமிழ் ஊடகவியலாளர்கள் மட்டும் தான் பயிற்சி பெறலாம் என வரையறை ஏதாவது உள்ளதோ தெரியவில்லை.

தமிழ்நாட்டு ஊடகத்துறையும் இலங்கை ஊடகத்துறையும் வெவ்வேறான போக்குடையவை. தமிழ்நாட்டுப் பத்திரிகைத் துறை சினிமா மற்றும் வன்முறை சார்ந்த செய்திகளுக்கே முக்கியத்துவமளிப்பதுண்டு. இலங்கை பத்திரிகைத்துறை ஒரு சிறந்த சமூக கலாசாரப் பின்னணியுடன் கூடியது என்பதை யாராலும் மறுக்கமுடியாது.

தமிழ் நாட்டிலிருந்து ஊடகவியலாளர்களை அழைத்து வருவதை யாரும் குறை சொல்லவில்லை. ஆனால், தரமான ஊடகவியலாளர்களை அழைத்து வாருங்கள் என்பதே எமது வேண்டுகோள். இந்திய ஊடகவியலாளர்களை வைத்துத்தான் கட்டாயம் பயிற்சி நெறியை நடத்தவேண்டுமென்றால், கொழும்பிலிருந்து கடமையாற்றும் இந்திய ஊடகவியலாளர்களை அழைத்து வந்து பயிற்சியளித்தால் பொருட்செலவை அரைவாசியாகக் குறைக்கலாம். அத்துடன், இந்தியாவிலிருந்து பத்திரிகையாளர்களை அழைத்துவந்து விரிவுரைகளை நிகழ்த்தும்போது இலங்கையில் தரமான பத்திரிகையாளர்கள் இல்லையா என்ற கேள்வி எழவேசெய்கிறது.

யாழ். பல்கலைக்கழத்திலேயே சிறந்த ஆங்கில விமர்சகர்கள் உள்ளனர். இங்கே ஊடக மூலவளம் ஆரம்பிக்கப்பட்டபோது மட்டக்களப்பு, வவுனியாவிலிருந்து பத்திரிகையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு ஊடகங்களுக்குச் செய்தி வழங்கும் எவரும் அழைக்கப்படவில்லை (வீரகேசரி நிருபரைத் தவிர).

அண்மையில் பி.பி.சி. நிறுவனம் ஐந்து நாள் பயிற்சிப்பட்டறையொன்றை யாழ். பல்கலைக்கழக ஊடக மூலவள நிலையத்தில் நடத்தியது. இந்தப் பயிற்சிப்பட்டறையில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சிலர், கிறிஸ்தவ மதகுரு ஒருவர் மற்றும் சில ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர். இந்தப் பயிற்சிநெறிக்கு என்ன அடிப்படையில் பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள் என யாழ்.பல்கலைக்கழக ஊடக மூலவள நிலையத்தினரிடம் விசாரித்தபோது, அவர்கள் தமக்கும் பயிற்சியாளர்கள் தெரிவுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லையெனவும் பி.பி.சி நிறுவனமே பயிற்சியாளர்களைத் தெரிவு செய்ததாகவும் தெரிவித்தனர். ஆனால். பி.பி.சி நிறுவனத்திடம் இதுபற்றி விசாரித்தபோது தமக்கும் பயிற்சியாளர்கள் தெரிவுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லையெனவும், யாழ்.பல்கலைக்கழகமே பயிற்சியாளர்களைத் தெரிவு செய்ததாகவும் பி.பி.சி நிறுவனத்தின் பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்தப் பயிற்சிப்பட்டறைக்கு சர்வதேச ஊடகங்களின் செய்தியாளர்கள் உள்வாங்கப்பட்டமையையிட்டு பயிற்றுவிப்பாளர் ஆச்சரியம் தெரிவித்துள்ளார்.

தாங்கள் பல்கலைக்கழக விதிமுறைகளுக்கு அமைவாகவே செயற்பட வேண்டியுள்ளதாகவும், பி.பி.சி. நடத்திய பயிற்சிப்பட்டறை பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி எனவும் பேராசிரியர் சண்முகதாஸ் தெரிவித்துள்ளார். **(Training for the Trainers)**

தமிழ்ப்பெண் எழுத்தாளர்களுள் சுஜாதா குறிப்பிடத்தக்கவர் என உரையாற்றிய தமிழ்ப் பேராசிரியர்களும் யாழ்.பல்கலைக்கழகத்தில் கடமையாற்றியுள்ளனர். இந்தப் பேராசிரியரின் மாணவர்களே இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் பணிபுரிகின்றனர்.

இவர்களினதும், ஒழுங்காகத் தமிழ் எழுதத் தெரியாத தமிழ்ப் பத்திரிகையாளர்களினதும், இதழியல் டிப்ளோமா பயிற்சியளிக்கும் செயல்முறையானது எவ்வாறு அமையப் போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ❐

யாழ்ப்பாணம்



### ஈராக்கைதிகள் துன்புறுத்தல்

# அமெரிக்க படை வீரர்கள் மீது விசாரணை ஆரம்பமாகவுள்ளது

ஈராக்கில் கைதிகள் மீது துஷ்பிரயோகங்கள் மேற்கொண்ட முதலாவது அமெரிக்கப் போர்வீரர் ஜேர்மி சிவிற் மீது பாக்தாத்தில் நீதி விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இவர் கைதிகளை சிறையில் நிர்வாணமாக நிறுத்திப் படமெடுத்தது தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டு விசாரிக்கப்படவுள்ளார்.

மேலும் மூன்று அமெரிக்க போர் வீரர்கள் தமது குற்றங்களுக்கு மன்னிப்புக் கேட்பதற்கு மறுத்திருந்ததனால் அவர்கள் மீதான விசாரணைகள் அடுத்த மாதம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதுவரை ஏழு அமெரிக்கப் போர்வீரர்கள் மீது ஈராக்கிய சிறைக்கைதிகள் துன்புறுத்தல் தொடர்பாக குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசாங்கம் சிறைக் கைதிகள் விவகாரம் தனிப்பட்ட பிரச்சினை எனக் காண்பிப்பதற்கு முற்படுகின்றது. தற்போதும் அபுகரெப் சிறைச்சாலையில் அவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றதென பி.பி.சியின் 'பனோராமா நிகழ்ச்சியின் உயர்அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதனிடையே 'ஜேர்மிசிவற்' மீதான குற்றம் பாக்தாத்திலுள்ள கூட்டுப் படைத் தலைமை அலுவலகத்தில் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

ஈராக்கிய கைதிகளை நாய்ச் சங்கிலியால் பிணைத்து படங்களை எடுத்திருந்தார் என இவர் மீது குற்றம்சுமத்தப்பட்டிருந்தது. இவ்வாறான நீதி விசாரணைகள் மூலம் அமெரிக்கா துன்புறுத்தல்களுக்கு எதிராக செயற்படவுள்ளதாக காட்ட முயல்வதாக பி.பி.சியின் 'டேவிட்



வில்ஷ்' தெரிவித்துள்ளார்.

மேலும் இவ் விசாரணைகள் நடைபெறும்போது 8 அராபிய ஊடகவியலாளர்கள் பார்வையாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் மனித உரிமை கண்காணிபாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. அத்துடன் விசாரணைகள் நடைபெறும் வேளையில் தகவல்களை படம் பிடிப்பதற்கோ, ஒலிபரப்புவதற்கோ அனுமதிவழங்கப்படவில்லை.

# 4 அல்கொய்டா சந்தேகநபர்கள் பாகிஸ்தான் படைகளால் கைது!

பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் அல் கொய்டா அமைப்பைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் நால்வர் பாகிஸ்தான் அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட தேடுதலில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவ்வேளையில் இவர்களிடமிருந்து வெடி பொருட்கள் குறிப்பிட்ட நேரத்தில்வெடிக்க வைப்பதற்கு உபயோகப்படுத்தும் கணினிகள் காணப்பட்டதாகவும் பாகிஸ்தான் தகவல் அமைச்சர் செய்தி ஸ்தாபனமொன்றுக்கு தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவேளை இவர்கள் வெளிநாட்டு கடவுச் சீட்டுக்களை வைத்திருந்தனர். அத்துடன் இப்பிரதேசத்தில் நூற்றுக் கணக்கான வெளிநாட்டு ஆயுததாரிகள் மறைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் காணப்படும் தீவிரவாதிகளுக்கு மன்னிப்பு வழங்குவதற்கு பாகிஸ்தான் முன்வந்த போதிலும் தீவிரவாதிகள் போதிய ஒத்துழைப்பு வழங்கவில்லை.

ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் வாழும் பழங்குடி மக்களின் தலைவர்கள் தீவிரவாதிகளுடன் செயலாற்றியிருந்தனர். இந்தப் பழங்குடித் தலைவர்களுடன் போதிய ஒத்துழைப்பை தீவிரவாதிகள் வழங்காது விடின் அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.




# நிக்பேக்கின் தந்தை பிரிட்டனிலுள்ள போருக்கு எதிரான அமைப்பிற்கு கடிதம்

ஈராககில் கடத்தல் காரர்களினால் கழுத்து வெட்டிக் கொலைசெய்யப்பட்ட 'நிக்பேக்' கின் தந்தை பிரித்தானியாவில் இயங்கும் ஈராக்கிய போருக்கெதிரான அமைப்பிற்குக் கடிதம். ஒன்றினை எழுதியுள்ளார்.

நிக்பேக்கின் தந்தையான மைக்கல் பேக் தெரிவித்த கருத்துக்கள் சனிக்கிழமை அவ்வமைப்பினால் நடத்தப்படவுள்ள கூர்ப்பாட்ட ஊர்வலத்தில் தெரிவிக்கப்படவுள்ளது. மைக்கல் பேக் தெரிவித்த கருத்தில் தனது மகனின் படுகொலைக்கு அமெரிக்க அரசு ஈராக்கின்மீது மேற்கொண்ட தவறான நிர்வாகமே காரணமெனத் தெரிவித்திருந்தார்.

ஈராக்கில் ஏற்பட்டுள்ள வன்முறைகளுக்கு அமெரிக்கா, பிரித்தானிய ஆகிய நாடுகளின் அரசாங்



கங்களே காரணமெனவும் படைகள் உடன் ஈராக்கிலிருந்து வெளியேற வேண்டுமெனவும் மைக்கல் தெரிவித்துள்ளார்.

மேலும் லண்டனின் மத்திய பகுதியில் நடத்தப்பட்ட ஊர்வலத்தில் 200க்கும் மேற்பட்ட ஈராக்கியபோர் எதிர்ப்பாளர்கள் பங்குகொண்டிருந்தனர்.

# ரபா அகதி முகாமில் மீளவும் மோதல்கள்

'ரபா' அகதிமுகாமில் மீண்டும் பலஸ்தீனர்களுக்கும், இஸ்ரேல் படையினருக்கும் இடையே இடம்பெற்ற மோதல்களில் 20 பலஸ்தீனியர்கள் காயமடைந்துள்ளதாகத் தெரிவிகக்கப்பட்டுள்ளது.

20 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்ட பின்னர் மோதல்கள் பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியப் படையினருக்குமிடையே அதிகரித்துள்ளது. கொல்லப்பட்டவர்கள் எகிப்திய எல்லையூடாக ஆயுதங்களை ரபா முகாம் பிரதேசத்திற்குக் கடத்தி வந்த பலஸ்தீன தீவிரவாதிகளென இஸ்ரேல் தெரிவித்துள்ளது. மேற்குக் கரைப்பிரதேசத்தில் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையில் அல் அக்சா மாட்டியர் அமைப்பின் உள்ளூர் தலைவர் கொல்லப்பட்டுள்ளதாக பலஸ்தீனத் தகவல்கள் தெரிவித்தது. இஸ்ரேல் படையினரால் பலஸ்தீனர்கள் அழிக்கப்படுவதாக பலஸ்தீனத்தலைவர் அரபாத் தெரிவித்துள்ளார். கொல்லப்பட்டவர்ளில் இரு பலஸ்தீனச் சிறுவர்களும் அடங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையும், ஐரோப்பிய ஒன்றியமும் போர்ச்



செயற்பாடுகளை உடன் நிறுத்துமாறு இஸ்ரேலைக் கேட்டுள்ளன. இதனிடையே இஸ்ரேலின் இரு இடதுசாரி நாடாளுமன்ற அங்கத்தவர்கள் இஸ்ரேலின் போர்நடவடிக்கைகளை கண்டித்துள்ளனர்.

# தனது செல்வாக்கை குறைக்க மெக்ஸிக்கோ அரசு பிரசாரமாம்

## அந்நாட்டு நகரசபைத் தலைவர் தெரிவிப்பு

மெக்சிக்கோ நகரசபைத் தலைவர் அன்டர்ஸ் மனுவல அரசாங்கம் தனது செல்வாக்கை இழக்க செய்வதற்கான பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளார். நகரசபைத் தலைவர் அன்டர்ஸ் மனுவல் நிலச் சுவிகரிப்பில் ஈடுபட்டிருந்ததால் அவரின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது.

மெக்சிக்கோவில் 2006 ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் அன்டர்ஸ் ஜனாதிபதியாகும் வாய்ப்புக்கள் அதிகம் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையிலேயே மெக்சிக்கோ அரசாங்கம் மனுவின் உரிமைகளைப் பறித்துள்ளது.

மெக்சிக்கோ நகரின் வெளிப் பகுதி ஒன்றில் நகரசபையினால் கட்டப்பட்டு வந்த கட்டடமொன்றை தொடர வேண்டாமென்ற நீதிமன்றத்தின் உத்தரவை மனுவல் புறக் கணித்திருந்தார் எனவும் அரசு குற்றம்சுமத்தியுள்ளது.

மேலும் கடந்த திங்கட்கிழமை மெக்சிக்கோவின் சட்டமா அதிபர் அலுவலகம் தெரிவிக்கும்போது நகரசபைத் தலைவரின் தண்டனைக் கெதிரான உரிமைகளை நீக்கியுள்ள



தெனத் தெரிவித்துள்ளது. இதனால் நீதிமன்றம் மனுவலுக்கு தண்டனை வழங்குவதற்கான அதிகாரங்களை பெற்றுள்ளது.

### அமெரிக்க நிதி ஒதுக்கீடுகளுக்கு பொறுப்பான

# அலன் கிரின் ஸ்பானின் பதவிக்காலம் மேலும் நான்கு ஆண்டுகளுக்கு நீடிப்பு



அமெரிக்க நிதி ஒதுக்கீடுகளுக்கு பொறுப்பாக இருந்த அலென் கிரீன் ஸ்பான் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷினால் மீண்டும் நான்கு ஆண்டுகளுக்கு பதவி நீடிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் பொருளாதாரத்தை கண்காணிப்பதில் அலனுக்குள்ள ஆற்றலில் அதிக நம்பிக்கை கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார். 78 வயதுடைய கிறின்பான், ஏற்கனவே நான்கு தடவைகள் பதவி வகித்துள்ளார். வேறு ஒருவரை இப் பதவிக்கு அமெரிக்க அதிபர் புஷ் ஏன் தேர்ந்தெடுக்கவில்லை எனக் கேட்டபோது அலன் முடிந்தவரைக்கும் அப் பதவியை வகிக்கவேண்டுமென அதிபர் விரும்புவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க செனட்சபையும் அலரின் தேர்வுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. அமெரிக்காவில் வேலையாட்களுக்கும், புதிய தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கும் அதிக நன்மைகளைப் பெறுவதற்கு அலனின் திட்டங்கள் உதவியுள்ளதென தெரிவிக்கப்பட்டது. அத்துடன் அமெரிக்காவின் பொருளாதாரம் கடந்த 20 ஆண்டுகளில் அதிக வளர்ச்சி கண்டுள்ளதாகவும் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# போப்பாண்டவரின் 84 ஆவது பிறந்தநாள்



கத்தோலிக்க கிறிஸ்தவ மதத் தலைவர் போப் பாண்டவர் இரண்டாம் ஜோன் போலின் 84 ஆவது பிறந்தநாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

போர்த்துக்கேய நாட்டின் பிரதமர் ஜோஸ்மனுவல் டூராவோ பராசோ முதலில் போப் பாண்டவருக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து ஆசி பெற்றார்.

அவரைத் தொடர்ந்து போலந்து அதிபர் அலெக்சாண்டர் வாசினிஸ்கியும் வாழ்த்துத் தெரிவித்து ஆசி பெறறார்.

உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் வாழ்த்துத் தெரிவிப்பதற்கு வசதியாக வத்திக்கான் நகரில் சிறப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இது தவிர போப் பாண்டவரின் இளமைக்காலப் படங்கள் அடங்கிய 200 பக்க புத்தகமும் வெளியிடப்பட்டுள்ளது.

# இராணுவ பயிற்சி விமானங்கள் நேருக்கு நேர் மோதல்!

(புதுடெல்கி)

அமெரிக்காவில் இண்டியானா மாகாணத்தில் ஒக்டவுன் நகரிலிருந்து 65 கி.மீ வடக்கில் உள்ள டெர்ரிஹூாட்டி பகுதியில் எப் 16 ரக போர்விமானங்கள் பயிற்சியில் ஈடுபட்டன.

அப்போது எதிர்பாராத விதமாக இரண்டு விமானங்களும் நடுவானில் மோதிக்கொண்டன. இதில் ஒரு விமானம் இல்லினாய்ஸ் மாநில ஊரக பகுதியில் விழுந்தது. மற்றொன்று இண்டியானா மாநில பகுதியிலுள்ள வயல்வெளியில் விழுந்தது. இந்த வி[illegible]த்தில் ஒரு விமானி பலியானார்.

இன்னொரு விமானி பரசூட்டில் குதித்து உயிர்தப்பினார்.

விமானங்கள் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டதற்கான காரணம் எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனால், விபத்து நடந்த நேரத்தில் இடிமின்னலுடன் மழை பெய்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமது இருப்பிடத்தின் அருகே பலத்த வெடிச்சத்தம் கேட்டதாகவும், விமானியின் சடலம் வயலில் கிடந்ததை பார்த்ததாகவும் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புதிய இந்தியப் பிரதமராக மன்மோகன் சிங் தெரிவு!



இந்தியாவின் புதிய பிரதமராக முன்னாள் அமைச்சரும் சிறுபான்மைச் சீக்கிய இனத்தைச் சேர்ந்தவருமான மன்மோகன் சிங் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் தலைவியான சோனியா காந்தி - தான் பிரதமர் பதவியை ஏற்கப்போவதில்லை என அறிவித்ததைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் உயர் மட்டம்கூடி ஆராய்ந்து இந்த முடிவை எடுத்துள்ளது.

காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான கூட்டணி அரசின் பிரதமராக மன்மோகன் சிங் நேற்று இந்திய நாடாளுமன்ற மத்திய கட்டடத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்திலேயே தெரிவு செய்யப்பட்டார்.

## கேணல் ரமேஷ் தலைமையில்

# புலிகளின் தளபதிகள் வன்னிக்கு திரும்பினர்!

(மட்டக்களப்பு)

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்காக விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ் தலைமையிலான குழுவொன்று நேற்று மட்டக்களப்பிலிருந்து வன்னிக்குச் சென்றது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடனும், இராணுவத்தினரின் விசேட பாதுகாப்புடனும் செங்கலடி கறுத்தப்பாலம் சோதனைச்சாவடி ஊடாக இவர்கள் தமது பயணத்தை ஆரம்பித்தனர்.

கேணல் ரமேஷுடன், தளபதிகளான ஜெயார்த்தன், ராம், ஜனார்த்தன் ஆகியோரும், கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, தொண்டர் நிறுவனங்களுக்கான இணைப்பாளர் தியாகராசா, தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கே.பி.றெஜி ஆகியோரும் இவர்களுடன் வன்னி திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் நேற்றுக்காலை தமது பயணத்தை ஆரம்பித்தனர்.

இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சுக்களை நடததவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி விலகினார்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை பிரதிநிதிப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யு.புஷ்பகுமார தனது பதவியை நேற்று இராஜினாமாச் செய்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றிய பின்னரே இவர் தனது இராஜினாமாவைச் சமர்ப்பித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை பலப்படுத்தும் முகமாகவும், முஸ்லிம் இனத்தவர் ஒருவரை நாடாளுமன்றத்தில் நியமிப்பதற்கு வழிவகுக்கும் பொருட்டுமே தான் பதவி விலகியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 4 முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டனர்!

(கொழும்பு)

சிறிலஙகா முஸ்லிம் காங்கிரஸின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருப்பதாக கட்சியின் செயலாளர் எம்.ரி.ஹசன் அலி நேற்று அறிவித்தார்.

கட்சிக்கும், கட்சித் தலைமைக்கும் அவதூறு ஏற்படுத்தும் வகையில், செயற்பட்டதற்காகவே இந்த நான்கு பேரும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், இவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அதுவரை இவர்கள் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான றிசாட் பதியுதீன், றஜீப் ஏ.மஜீத், ஹுசைன் பைலா மற்றும் மசூதீன் இனாமுலலா ஆகிய நான்கு பேருமே கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் கட்சிச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## வற்றாப்பளை பொங்கலை முன்னிட்டு

# ஏ-9 வீதியை இரவு, பகலாக திறந்துவிடுமாறு கோரிக்கை!

(வவுனியா)

முல்லைத்தீவு - வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு - எதிர்வரும் 30 ஆம், 31 ஆம் திகதிகளில் ஏ-9 வதியை இரவு பகலாகத் திறந்துவிட நடவடிக்கை எடுக்குமாறு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்துக்கு, முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார் அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாபபளை கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்துக்கு நாடு முழுவதிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெருமளவில் வற்றாப்பளைக்குச் செல்லும் பக்தர்களின் நலன் கருதி - ஏ-9 வீதியிலுள்ள முகமாலை மற்றும் ஓமந்தைச் சோதனைச் சாவடிகளையே 30 ஆம், 31 ஆம் திகதிகளில் முழுநேரமும் திறந்துவிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள இக்கடிதத்தின் பிரதிகள், யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பகுதிகளுக்கான இராணுவ கட்டளை அதிகாரிகளுக்கும் -

வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி அரச அதிபர்களுக்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.தே.க. அமைப்பு செயலராக எஸ்.பி.திஸநாயக்க நியமனம்!

ஐககிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்புச் செயலாளராக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க நியமிக்கப்பட்டிருப்பதாக- ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில், நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பேசியபோதே பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்தத் தகவலை வெளியிட்டார்.

கட்சியின் அனைத்து அமைப்பு நடவடிக்கைகளும் எஸ்.பி.திஸநாயக்கவால் மேற்கொள்ளப்படத்தக்க வகையில், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்நியமனத்தை வழங்கியுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - பிரதி சபாநாயகர் தெரிவு, குழுக்களின் பிரதித் தலைவர் நியமனங்கள், நாடாளுமன்றத்தில் போட்டியின்றி இடம்பெற்றமை குறித்துக் கருத்து வெளியிட்ட பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்,

நாடாளுமன்றத்தில் இவ்வாறான சுமுகமான சூழல் உருவாவது நல்ல அறிகுறியெனத் தெரிவித்தார்.

# திருமலையில் புலிகள் - இராணுவம் சந்திப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவ மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும், விடுதலைப்புலிகளின் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளருக்கும் இடையிலான முதலாவது சந்திப்பு நேற்று நடைபெற்றது. யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவின் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நேற்றுமாலை 3.30 மணிக்கு இந்த சந்திப்பு இடம் பெற்றது.

இச்சந்திப்பில் விடுதலைப்புலிகளின் தரப்பில் மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் எழிலன் கலந்துகொண்டார்.

இராணுவத்தரப்பில் மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில தென்னக்கோன், பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஏவகே, கடற்படை பிரதிக் கட்டளைத் தளபதி ஆகியோர் கலந்துகொண்டனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்ட இணைப்பாளர் முன்னிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. (04, 10)

# இடைக்கால தீர்வு...

நிதியுதவியை வழங்கும். டோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்டபடி இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் தமது உதவித் தொகையை படிப்படியாக அதிகரித்து வழங்கும்., இதற்கு இலங்கையின் சமாதான முயற்சிகள் விரைவுபடுத்தப்படுதல் வேண்டும்.

இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள பேச்சுவார்த்தையானது, சிறந்த கட்டமைப்பு, திறந்த மனதும் கொண்டதாக அமைந்திருக்கவேண்டும்.

அப்போதுதான் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்க வாய்ப்பேற்படும் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை நடத்தக்கூடிய குழுவை இன்னமும் தயார்செய்யவில்லை. அதேநேரம் தமிழீழ விடுதலைப் புலிகள் சட்ட ஆலோசனைகளுக்கு காலம் தேவை என குறிப்பிட்டுள்ளனர். இந்த நிலையில் இன்னும் இரண்டுமாதகாலமாவது பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கத் தேவையாக இருக்கும் என அகாஷி குறிப்பிட்டுள்ளார்.

முன்னைய அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் பாரிய பங்கை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கியுள்ளதாக ஜனாதிபதி குற்றம் சுமத்தியிருந்தார்.

எனினும், தற்சமயம் பேச்சுவார்த்தையில் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புக்களும் நம்பிக்கையை வெளிக்காட்டி வருவதாகவும் அகாஷி குறிப்பிட்டார்.

## மட்டக்களப்பு...

வந்தனர்.

இந்த நிலையில் சமாதான சூழலை விரும்பாத சக்திகளின் சதிவேலையே இது என்பதனை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதற்கு ஒவ்வொருவரும் ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமெனவும் கௌசல்யன் கேட்டுக்கொண்டார். (01)

இறுதிச் சந்தர்ப்பம்
A/L 2004 மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியை தீர்மானிக்கும்
பொதுச் சாதாரண பரீட்சை வழிகாட்டி
P.உமாசங்கர், P.கமல்தாசன்
பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, சிதம்பரப்பிள்ளை, துர்க்கா, அறிவு அமுது (வன்னி) கவிதா (வவுனியா)
(2536)

# கந்தப்பொல போன்ற வன்முறைகள் நாட்டில் குழப்பத்துக்குக் காரணம்!

## ரவூப் ஹக்கீம் கூறுகிறார்

பொலிஸ் உட்பட நாட்டிலுள்ள அரச படைகளின் இனவிகிதாசார அடிப்படையிலான எண்ணிக்கை பேணப்படாமையே நாட்டில் இனவன்முறைகள் இடம்பெறக் காரணம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கந்தப்பொல சம்பவம் தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

கந்தப்பொல நிகழ்வைப் போல் நாட்டில் இடம்பெற்ற பல நிகழ்வுகளே இன்றைய குழப்பத்துக்குக் காரணமாக அமைந்தன. இதனை யாரும் மறுக்கமுடியாது.

இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இனரீதியிலான பிரதிநிதுத்துவமுடைய பொலிஸ் படையை அமைத்தல் அவசியம்.

கந்தப்பொல வன்செயல்கள் வரலாற்றில் ஒரு கறுப்புப்புள்ளியாக அமைந்துவிட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கந்தப்பொல...

கறுப்புப் பட்டியணிந்து ஊர்வலம் நடத்தினர்.

கந்தப்பொல வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்றத்தில் நேற்று ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் நடைபெறவிருந்தது. இதற்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22 பேரும் கறுப்புப்பட்டியணிந்து ஊர்வலம் நடத்தினர்.

நாடாளுமன்ற நுழைவாயிலில் இருந்து பிரதான வாயில்வரை சுலோகங்களை ஏந்தியவாறு ஊர்வலமாகச் சென்று தமது கண்டனத்தைத் தெரிவித்தனர்.

இந்த ஊர்வலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன், மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணனும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, கந்தப்பொலவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தைக் கண்டித்து சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

பதிப்புலக வேந்தர்களே!
நீண்டநாள் உங்கள் எதிர்பார்ப்பினை 120 நிமிடங்களில் நாங்கள் எமது மண்ணில் நிறைவேற்றுகின்றோம்
நிலா பதிப்பகம்

PCC COLOUR DIGTAL PRINTER

சகல விதமான அளவுகளிலும் கலர் பிரித்தல் செய்து கொடுக்கப்படும் (COLOUR SEPARATION) சேவையினை அதிவேகமான முறையில் மிககுறைந்த செலவில் செய்து வழங்குகின்றோம்.
- 4X8 அளவுகளில் PCC கலர் பிறின்ட் சேவை (4x8 SIZE PCC COLOUR DIGTAL PRINT)
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை 4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதிதல் சேவை HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப் போடுதல் (SPIRAL CLIP & MATERIAL CLIP) SERVICE
பிரதான சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2285935
தொலைநகல்: 021-228 5935

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.